30284

# யாரால்? யாரால்? யாரால்?

கலைஞர்
மு. கருணாநிதி

# யாரால்? யாரால்? யாரால்?

கலைஞர் மு. கருணாநிதி

பாரதி நிலையம்
தியாகராய நகர் : : சென்னை-17

நவம்பர் 1981
ஏப்ரல் 1982
ஜனவரி 1984

விலை ரூ. 1-00

# இளைய தலைமுறைக்காக...

திராவிடர் இயக்கம் - சுயமரியாதை இயக்கம்- இவற்றின் கடந்த கால வரலாற்றையும் - ஆற்றியுள்ள பணிகளால் விளைந்துள்ள பயன்களையும் இன்றைய இளைய தலைமுறை அறிந்து தெரிந்து நிமிர்ந்திட எனது நினைப்பையும் நேரத்தையும் ஒரு பகுதி செலவிட வேண்டுமெனத் திட்டமிட்டுள்ளேன்.

அதன் வெள்ளோட்டம்தான் இந்தச் சிறிய நூல்!

தமிழ்க்கனிப் பதிப்பகத்தாரிடம் உரிமை பெற்று இதனை வெளியிடும் பாரதி நிலையத்துக்கு என் நன்றி உரியதாகுக!

3-11-81

அன்புள்ள,

மு.க.

அச்சிட்டோர் : பிரிண்டிகா, சென்னை-600 014.

# யாரால்? யாரால்? யாரால்?

## உடன் பிறப்பே,

மீனாட்சிபுரத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறிய நிகழ்ச்சிக்கு எத்தனையோ காரணங்கள் கூறப்பட்டன!

இந்துமத ஆதிக்கக்காரர்கள் தங்கள் தவறை மறைக்கவும்—பன்னெடுங்காலமாகச் சாத்திர சம்பிரதாயங்கள் பெயரால் தாழ்த்தப்பட்ட மக்களைப் பொட்டுப் பூச்சிகளாய்—புன்மைத் தேரைகளாய் நடத்திய கொடுமைகளின் கோரம் தாங்க முடியாமல்தான் இத்தகைய மனமாற்றங்கள் ஏற்பட்டன என்ற உண்மையை ஒளித்திடவும்—மீனாட்சிபுரத்திற்காகக் கட்டவிழ்த்துவிட்ட காரணங்கள் மிகப்பல!

இப்போது—இதோ ஒரு புதிய காரணத்தை (SUNDAY 11-10-81) "சண்டே" எனும் ஆங்கில இதழில் நண்பர் "சோ" அவர்கள் கண்டுபிடித்து அதனைக் கட்டுரையாகத் தீட்டியுள்ளார்.

மீனாட்சிபுரம் சம்பவத்திற்கு, சாதிவெறித் தன்மை காரணம் இல்லையாம்!

நாய் நடை பயிலலாம்! பன்றி பவனி வரலாம்! பாம்பு ஊர்வலம் நடத்தலாம்! ஆனால் பஞ்சமன் தெருவில் நடக்கக்கூடாது என்றும் அது பாவம் என்றும்—வேதம் ஏற்காது என்றும் மனுஸ்மிருதி மறுக்கிறது என்றும்—ஆண்டவனுக்கு ஆகாது என்றும் - எந்த ஆதிக்கபுரியினர் அன்றுதொட்டு இன்றுவரை தடுத்து வந்தார்களோ, அந்த ஆதிக்கக் கோட்டையின் "அதிசய மனிதர் சோ" அவர்கள், இப்போது புதிய காரணம் ஒன்றைத் தனது பொல்லாத மூளையில் தோற்றுவித்துக் கொண்டு அதனை நீண்டதோர் கட்டுரையாக்கி நீட்டி முழக்கியிருக்கிறார்.

"அக்கிரகாரத்து அதிசய மனிதர்" என்று அறிஞர் அண்ணா அவர்கள், வ.ரா. அவர்களைப் புகழ்ந்து எழுதியது உண்டு! புரட்சிகரமான கருத்துக்களை எழுத்தின் வாயிலாக வழங்கி—அவ்வண்ணமே வாழ்ந்து காட்டியவர் வ.ரா. என்பதால்!

ஆனால் இதோ இந்த அக்கிரகாரத்து அதிசய மனிதர், மீனாட்சிபுரம் சம்பவங்களுக்குக் காரணமாக விளங்கும் மத வெறி—ஆதிக்கவெறி—மனுஸ்மிருதி—வர்ணாஸ்ரமதர்மம் — அனைத்தையும் காப்பாற்ற வேண்டுமென்ற ஆர்வத்தோடு தனது புதுக் கண்டுபிடிப்பை வெளியிட்டு மகிழ்ந்திருக்கிறார். இதோ ''சண்டே'' ஆங்கில ஏட்டில் அவர் வெளியிட்டுள்ள விஷயங்களை (விஷங்களை என்பதே பொருந்துமென்க)உடன் பிறப்பே, உன் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1) தி.மு.க.வும் திராவிடர் கழகமும் செய்த அழிவு வேலையின் அத்தாட்சிதான் மீனாட்சிபுரம் சம்பவம்!

2) ஈ.வெ.ராமசாமி நாயக்கர், பிரிட்டிஷ் புகழ் பாடிகளான ஜஸ்டிஸ் கட்சியின் வாரிசு! தி. க. வின் நிறுவனர்! ஜஸ்டிஸ் கட்சியின் பிராமண எதிர்ப்பை எடுத்துக் கொண்டார். பிராமண ஆதிக்கத்திலிருந்து விடுபட மக்கள் இந்துமத நம்பிக்கையிலிருந்து விடுபடவேண்டுமென்றார். பிராமண ஒழிப்பையும் இந்துமத ஒழிப்பையும் ஒன்றெனக் கருதினார்!

3) இப்போது ஏற்பட்ட மீனாட்சிபுர அறுவடைக்கு அப்போதுதான் நிலம் உழவு செய்யப்பட்டது!

4) சி. என். அண்ணாதுரையால் துவக்கப்பட்ட தி. மு. கழகம் இந்தப் பாவத்திலிருந்து பிறந்தது!

5) உணர்ச்சிகளைக் கொல்லும் சினிமாவை, தி. மு. க. நாத்திகப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தியது. கோயில்களையும் பூசாரிகளையும் கொடுமையாளர்களாகச் சித்தரித்து, சந்நியாசிகளைத் தீயவர்களாகத் தீட்டிக் காட்டி, சினிமா பார்க்கிற ஒவ்வொருவரையும் இந்து மதத்தைக் கண்டிக்கிற நிலைமை உருவாக்கப்பட்டது.

6) தமிழ்நாட்டு மக்கள் ஒருவித அசிங்கமான நாத்திகத்திற்கு பலியானதன் விளைவுதான் மீனாட்சிபுரம்!

7) இந்துமதக் கடவுள்கள் மீது ஈ.வெ.ரா. மழையாகப் பொழிந்த ஆபாச அர்ச்சனை,

இந்து மதத்தின் மீது சி. என். அண்ணாதுரை பொழிந்த நிந்தனைகள்,

முதலமைச்சராகக் கருணாநிதி பதவியில் இருந்த காலத்தில் இந்துக்களின் நம்பிக்கை மீது அதிகாரபூர்வமாகக் கட்டவிழ்த்துவிட்ட அவதூறுடன் கூடிய ஏளனம்

இவைகளுக்குப் பிறகும் தமிழர்கள் அமைதியோடு இருக்கிறார்கள் என்றால் இது தமிழனின் பொறுமைக்கு அடையாளமா? சாதி வெறிக்கு அடையாளமா?

**உடன் பிறப்பே, இத்தனையும் "சோ" பொழிந்துள்ள சொன்மாரி!**

**பெரியார்**
**அண்ணா**
**கருணாநிதி**
**தி.மு.க.**
**தி.க.**

மீனாட்சிபுரத்திற்கு யார் யார் காரணம் எனக் கூறி, குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி - இந்தக் குற்றவாளிகளைத் தமிழர்கள் இன்னமும் பொறுத்துக் கொண்டு அமைதியாக இருக்கிறார்களே என்றும் அங்கலாய்த்துக் கொண்டு "சண்டே" இதழில் தனது கட்டுரையை முடித்திருக்கிறார்!

இந்தியாவின் வடபகுதியில் பல இடங்களில் நடைபெற்றுள்ள மதமாற்றங்களுக்கும்—தி.க.வும், தி.மு.க.வும் தான் காரணம் என்று சோ சொல்லப் போகிறாரோ என்னவோ தெரியாது! ஒரு பெருங் கூட்டத்துடன் டாக்டர் அம்பேத்கார் புத்த மதத்தைத் தழுவினாரே; அதற்குக் காரணம் இந்துமத ஆதிக்கமா? அல்லது வேறு ஏதாவது சோ அவர்கள் கண்டுபிடித்து எழுதப் போகிறாரா? தி. க., தி.மு.க. ஆகிய இயக்கங்கள் தோன்றுவதற்கு முன்பே பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் மதமாற்றங்கள் ஏற்பட்டதற்குக்கூட அப்போது பிறக்காமலிருந்த பெரியாரும் அண்ணாவும் கருணாநிதியும் தி.க.வும். தி.மு.க.வும் தான் காரணம் என்று கதைக்கப் போகிறாரா?

தி.க.வும் தி.மு.க.வும் அழிவு வேலை செய்தன; அதற்கு அத்தாட்சிதான் மீனாட்சிபுரம் என்கிறார் நண்பர்!

தும்பும் தூசியும் ஒட்டடையும் குப்பையும் நிறைந்துள்ள வீட்டில் அவற்றையெல்லாம் அகற்றிவிட்டு இல்லத்தைத் தூய்மையாக வைத்திட முயல்வது அழிவு வேலை என்று அவரது அகராதியில் அச்சாகியிருக்கிறது போலும்!

சாதிக்கறையானும், புராண ஆபாசப் புற்றுக்களும், சந்தன தாம்பூலம் பால் பழம் வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டியவைகள் என்று நண்பர் வாதிடுகிறாரா?

அவரது கட்டுரையிலேயே பெரியாரைப் பற்றிக் குறிப்பிடும்போது ஈ.வெ.ரா. என்று கூடக் குறிப்பிடாமல் "ஈ.வெ. ராமசாமி நாயக்கர்" என்றுதானே ஆரம்பிக்கிறார்! நாயக்கர் என்ற சாதிப் பெயரைச் சேர்க்காமலே பெரியார் என்றால் எல்லோருக்கும் தெரியக்கூடிய பெயர்தானே? அப்படியிருந்தும் அந்தச் சாதியுணர்வு சோவுக்குப் போகவில்லையே! ஜஸ்டிஸ் கட்சி, பிரிட்டிஷாருக்குப் புகழ் பாடியதாம்—அதற்கும் மீனாட்சிபுரத்திற்கும் என்ன தொடர்பு? இந்த ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடுகிறோமே; அந்த மகாகவி பாரதியார் கூட பிரிட்டிஷ் இளவரசரைப் புகழ்ந்து வரவேற்பு வாழ்த்துக் கவி பாடியவர்தான்! அதையேன் 'சோ' மறந்துவிட்டார்! ஆரம்பத்தில் காங்கிரசே கூட உத்தியோகங்களில் இந்தியர்களுக்கு அதிக இடம் கோரித்தான் ஆரம்பிக்கப்பட்டது! அதனால்தான் தாழ்த்தப்பட்ட பிற்பட்டவர்களைப் பின் தள்ளிவிட்டு மிக உயர்சாதிக்காரர்கள் "கருங்குழிப் பார்சல்"களைப் பற்றியெல்லாம் கூடக் கவலைப்படாமல் பிரிட்டிஷ் ஆட்சியிடம் பதவிகளைப் பெற்றுப் பரவசமுற்றனர்! பிரிட்டிஷ்காரனாலேயே தொடங்கப்பட்ட காங்கிரஸ் இயக்கம் பின்னர் அவனிடமிருந்தே விடுதலை கோருகிற இயக்கமாக உருவெடுத்துப் போராடவில்லையா? அந்தப் போர்ப்படைத் தளபதிகளில் ஒருவராக பெரியார் விளங்கிடவில்லையா? பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் இட ஒதுக்கீடு தேவை என்ற தனது கருத்துக்கு அன்றைய காங்கிரஸ் தலைவர்களான ராஜாஜி போன்றவர்கள் இடம் தராததாலும்—வ.வே.சு. அய்யர் அவர்கள் சேரமாதேவியில் நடத்திய குருகுலத்தில் சமபந்தி உணவுக்கு மாணவர்களை அனுமதிக்காத காரணத்தாலும்—பெரியார் அவர்கள் போர்க்குரல் எழுப்பிக் காங்கிரசை விட்டு வெளியேறிய வரலாற்றை நாடு மறந்துவிடவில்லையே!

"சேரமாதேவியில் சேர்க்கமாட்டோம் சமத்துவக் கொள்கையை" என்று செப்பியவர்களின் செயலால் மீனாட்சிபுரத்து உணர்வுகள் ஏற்பட்டதா? அல்லது அன்றைக்கே அந்த சாதி வெறிச் சண்டாளத்தனத்தை எதிர்த்துச் சங்கநாதம் செய்த தந்தை பெரியார் செயலால் மீனாட்சிபுரங்கள் ஏற்பட்டனவா?

அன்புள்ள,

மு.க.

# 2. அன்று ஒலித்த அந்தச் சிம்மக்குரல்!

உடன் பிறப்பே,

"ஜஸ்டிஸ் கட்சியின் பிராமண எதிர்ப்பை பெரியார் எடுத்துக் கொண்டார். பிராமண ஆதிக்கத்திலிருந்து விடுபட-மக்கள் இந்துமத நம்பிக்கையிலிருந்து விடுபட-வேண்டுமென்றார்" என்பதாக சோ, தனது கட்டுரையில் அறிவிக்கிறார்.

ஜஸ்டிஸ் கட்சி, பிராமணரல்லாத மக்கள் சமுதாய, பொருளாதார, அரசியல் துறைகள் அனைத்திலும் படுபாதாளத்தில் தள்ளப்பட்டுக் கிடப்பதைக் கண்டு, கிளர்ந்தெழுந்து அவர்களைக் கைதூக்கி விடவும் - தன்மானமுள்ள மனிதர்களாகத் தலைநிமிர்ந்து நடமாடிடவும் செய்திடத் தோன்றிய ஒரு இயக்கம். இருண்டு கிடந்த தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பிராமணரல்லாத மக்கள் ஆகியோர் வாழ்வுக்காக ஏற்றி வைக்கப்பட்ட ஒளிவிளக்கு! அந்த ஒளி விளக்கின் உதவியால் ஒரு சில பிராமணரல்லாத குடும்பத்தினர் நீதிபதிகளாக, ஐ.சி.எஸ். அதிகாரிகளாக, பொறியாளர்களாக, டாக்டர்களாக இன்னும் பல பெரிய பதவியாளர்களாக வர முடிந்தது என்பதும்—அப்படி வந்து முன்னேறிய குடும்பங்களே வாழையடி வாழையாக அந்த உத்தியோகங்களில் உரிமை கொண்டாடி ஒட்டிக் கொண்டதையும் எண்ணிப் பார்த்துத்தான்—பார்ப்பனரல்லாதார் இயக்கம் தனிப்பட்ட சிலருக்குப் பயன்படுவது என்ற நிலையை மாற்றிடவும், மொத்தச் சமுதாயமும் இழிவிலிருந்தும் நலிவிலிருந்தும், உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் இருந்தும் விடுபட்டு முன்னேற்றம் கண்டிட வேண்டும் என்ற நோக்கத்துடனும், வெள்ளை ஏகாதிபத்தியத்தை வெறுக்கிறோம் விரட்டியடிக்க விரும்புகிறோம் என்ற எண்ணத்தை எதிரொலிக்கும் விதத்திலும் சேலத்து மாநாட்டில் ஜஸ்டிஸ் கட்சி எனும் பெயரை திராவிடர் கழகம் என மாற்றி, வெள்ளையர்கள் வழங்கிய பட்டங்களை உதறியெறிந்துவிட வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றி ஏழை எளிய பாட்டாளி மக்களின் இதய கீதமாக—இயக்கத்தை நடத்திச் செல்லப் பெரியாரும்

அண்ணாவும் திட்டம் வகுத்தனர். ஜஸ்டிஸ் கட்சி பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட இயக்கமே தவிர, பிராமணர்களை எதிர்ப்பதை தனது மூல நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை! கொசுவலை கட்டிக் கொள்வது நமது உடல் ஆரோக்கியத்திற்காக! கொசுக்களின் விரோதிகள் என்று நம்மைப் பிரகடனப்படுத்திக் கொள்வதற்காக அல்ல!

1926-ஆம் ஆண்டிலேயே பெரியார் சென்னை திருவல்லிக்கேணியிலே பேசியது 15-8-26 குடியரசு இதழில் வெளிவந்திருக்கிறது. அது இதோ:—

"சாதி வித்தியாசம் நிலைத்து நிற்பதற்கும், வகுப்புத் துவேஷங்கள் வளருவதற்கும் நிரந்தரமான ஏற்பாட்டைப் பார்ப்பனர்களே செய்து வைத்துக்கொண்டு நம்மீது குறை கூறுகிறார்கள். நாம் இப்போது பார்ப்பனர்களைக் கேட்பதெல்லாம் எங்களையும் சமமாகப் பாவியுங்கள், எங்களைத் தாழ்ந்தவர்கள் என்று சொல்லி இழிவுபடுத்தி எங்கள் சுயமரியாதையைக் கொல்லாதீர்கள் என்பதேயன்றி வேறில்லை. என்னை வகுப்புத் துவேஷி என்கிறார்கள். தயவு செய்து நீங்கள் என்னோடு வருவீர்களேயானால் இவ்வூருக்குள் சுற்றிப்பார்த்தால் பார்ப்பனர்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு காப்பிக் கடையிலும்—சாப்பாட்டுக் கடைகளிலும்—இரயில் வேக்களில் உள்ள சாப்பாட்டுக் கடைகளிலும்—சத்திரம் சாவடி கோயில் குளங்களிலும்—இது பிராமணர்களுக்கு என்றும், சூத்திரரும் பஞ்சமரும் முகமதியரும் கிறிஸ்துவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் போர்டுகள் போட்டும் நிர்பந்தம் ஏற்படுத்தியும் துவேஷத்தையும் வெறுப்பையும் இழிவையும் உண்டாக்கி வருவது நானா, அல்லது பார்ப்பனர்களா என்பதைக் கவனியுங்கள்!"

1926-ஆம் ஆண்டில் பெரியார் அவர்கள் தொடுத்த இந்தக் குரலுக்கு, விடுத்த வினாவுக்கு—நண்பர் "சோ" போன்றவர்களின் விளக்கமென்ன?

அந்தச் சிம்மக் குரல் அன்றைக்கு ஒலித்திராவிட்டால்—இன்றைக்குத் தென்னகத்தில் ஒரு சிறு குழுவினர், மிகப் பெருங் கூட்டத்தைத் தங்கள் காலடியில் குற்றேவல் செய்கிற கொத்தடிமைகளாகவன்றோ ஆக்கியிருப்பர்!

அந்தச் சிம்மக் குரலுக்குப் பிறகும் இன்றைக்குக் கூட அத்தகைய ஆதிக்கக்காரர்கள் - மக்களில் ஒரு பகுதியினரை மாக்களாக நடத்திட வகுத்திட்ட மாயையினால் தானே மீனாட்சிபுரங்களில் குமுறலும் கொந்தளிப்பும் கிளம்புகின்றன!

பிராமண ஆதிக்கத்திலிருந்து விடுபட மக்கள் இந்துமத நம்பிக்கையிலிருந்து விடுபட வேண்டுமென்று பெரியார் கூறியது எதனால்?

இந்துமதம் என்ற இனிப்பான சொல்லைப் பயன்படுத்திக் கொண்டுதான்; ஒரு குலத்துக் கொரு நீதியென்ற நிலை உருவாக்கப்பட்டது! இந்துமதம்தான் நால்வகை வருணங்களை உருவாக்கி, அந்த நாலு வருணத்திலும் சேராதவர்களாக தாழ்த்தப்பட்ட மக்களை ஒதுக்கித் தள்ளியது!

இதோ; மீண்டும் பெரியார் பேசுகிறார்!

''இஸ்லாம், கிறிஸ்தவர், பவுத்தர் அல்லாத மக்களை பொதுவாக இந்துக்கள் என்று பெயரளவில் சொல்லுவதைத் தவிர அந்த ''இந்து'' என்பது சமுதாயப் பெயரா? இனப் பெயரா? மதப்பெயரா? என்பதற்கு யாதொரு விளக்கமும் இல்லை! இந்து என்றால் இந்தியன் என்ற வார்த்தையின் சுருக்கச்சொல் என்பதல்லாமல் அதற்கு வேறு கருத்து எதுவுமில்லை. பவுத்தம், கிறிஸ்து, இஸ்லாம் முதலிய மதங்களுக்கு மத கர்த்தாககளின் பெயர்கள் இருக்கின்றன. சைவம் வைணவம் என்னும் மதங்களுக்கு சிவன், விஷ்ணு என்ற மதக் கடவுள்களின் பெயர்கள் இருக்கின்றன. வைதீக மதம், ஸ்மார்த்த மதம் என்பவற்றுக்கு வேதம், ஸ்மிருதி என்ற நூல்கள் இருக்கின்றன. மத கர்த்தாக்கள் பெயர் இல்லாமல், கடவுள் பெயர் இல்லாமல், சம்பந்தப்பட்ட நூல்கள் இல்லாமல் குறிப்பிடத் தகுந்த ஆதாரம் இல்லாமல் ஒரு மதம் இருக்கிறது; அதுதான் இந்து மதம் என்றால் அந்த ''இந்து'' என்ற சொல் மதத்தைக் குறிப்பதாக யார்தான் ஒப்புக் கொள்ள முடியும்? பழக்க வழக்கத்தில் தந்திரசாலிகளுக்கு அனுகூலமாகவும் அறியாத பாமர மக்களுக்குக் கேடாகவும் இழிவாகவும் தலையெடுக்க வசதியில்லாததாகவும் இருக்கிற ஒரு நடவடிக்கைக்கு இந்து மதம் என்ற பெயர் இருக்கிறது என்பதல்லாமல் வேறென்ன? ஆரியர்களின் கொள்கைகளும்

வழக்கங்களுந்தான் இந்து மதம் என்று அவர்களிலேயே ஒரு சாராரும்—வேதமும், ஸ்மிருதிகளும், புராணங்களும்தான் இந்து மதம் என்பதோடு—மனு தர்ம சாஸ்திரம் தான் இந்து மதத்திற்கு சாஸ்திரம் (சட்டம்) என்றும் அவர்களிடையே வேறொரு சாராரும் கூறி அவைகளை நடப்பாக்கி வருகிறார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் வர்ணாஸ்ரம தர்மம் என்ற முறை இல்லாவிட்டால் இந்து மதம் என்று சொல்ல எதுவுமேயில்லை''

பெரியாரின் இந்த உரையிலிருந்து என்ன தெரிகிறது! வர்ணாஸ்ரமக் கொள்கைதான் மக்களைப் பல பிரிவுகளாகப் பிரித்து, ஆதிக்கம் பெற்ற ஒரு பிரிவினர், மற்ற பிரிவினரை அடிமைகளாகவும் தொழும்பர்களாகவும் நடத்திட வழி வகுத்துக் கொடுத்திருக்கிறது என்றும்—அதற்கு ''இந்து மதம்'' என்ற பசுத்தோலை, உயர்சாதிப் புலிகள் போர்த்திக் கொண்டு உலவுகின்றன என்றும் தெளிவாகப் புரிகிறதல்லவா? இந்துமத ஆராய்ச்சியைப் பெரியார் நடத்தியதற்குக் காரணமே, அந்த மதத்தின் பெயரால் நால் வருணங்கள் வகுத்து ஐந்தாவதாக ஒரு வருணம் என்று பழங்குடிமக்களைப் பஞ்சமர்கள் என்று ஒதுக்கியும் தீண்டத்தகாதவர்களாக ஆக்கியும் நடைபெறுகிற கொடுமையைக் கண்டித்து அகற்றத்தான் என்பதை ''சோ'' போன்றவர்கள் அறியாமல் இருக்க முடியாது! ஆனால் அன்று கட்டிய அந்த ஆதிக்கக் கோட்டையைப் பெரியார் அசைத்துக் குலைத்து ஆட்டம் காணச் செய்துவிட்டாரே என்ற ஆத்திரம்; மீனாட்சிபுரத்திற்குக் காரணம் இந்துமதக் கொடுமைதான் என்பதை மறைத்துவிட்டு, அந்தக் கொடுமையை எதிர்த்த பெரியாரையும் பேரறிஞர் அண்ணாவையும் அவர்கள் கண்ட கழகங்கள் இரண்டையும் மனம் போனபடி தாக்கி எழுதிட வைக்கிறது!

அடடா! எவ்வளவு காலம் அனுபவித்த சுகம்! வளம்! விதைக்காமல் விளையும் கழனியாக இருந்த நிலை மாறுகிறது என்றால் நெற்றிக் கண்ணைத் திறக்கத்தானே செய்வார்கள்! அதைத்தான் நண்பர் 'சோ'வின் ''சண்டே'' இதழ்க் கட்டுரை ஒளிவுமறைவின்றி உணர்த்திக் கொண்டிருக்கிறது! தீண்டாமை ஒழிப்புக்காக வைக்கத்து வைதீக வெறியர்களின் வீதியிலே படை நடத்தி வெற்றி கண்ட வைக்கம் வீரர் பெரியாரைப் ''பாவச் சின்னம்'' என்றும்—அந்தப் பாவச் சின்னத்தில் பிறந்ததுதான் அண்ணா அவர்களால்

ஆரம்பிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகமென்றும் "சோ" எரியூட்டிக்கொண்டு தாக்குகிறார் என்றால்— அவரைப் போன்றவர்களின் அடங்காத எரிச்சலுக்குக் காரணம் மிக எளிதாகப் புரிகிறதல்லவா?

"வீடணர்கள் கிடைத்திருக்கிறார்கள்; வீழ்த்திவிடலாம் இராவணன் கூட்டத்தை" என நம்புகிறார்கள் அவர்கள்!

"சுக்ரீவர்கள் நம் பக்கம்—அதனால் மறைந்திருந்து வாலிகளை வதைத்துவிடலாம்"எனத் திட்டம் தீட்டுகிறார்கள் அந்தப் பழைய திருக் கூட்டத்தார், புதிய தெம்புடனே!

தனிப்பட்ட பிராமணர்களையல்ல, பிராமணீயத்தைத் தான் எதிர்க்கிறோம் என்று பெரியார் பேசியதையும்—எழுதியதையும்—பிராமணீயத்தை எதிர்த்து சமத்துவ சமதர்ம சமுதாயம் காண பார்ப்பன இளைஞர்களே கூடி முன் வந்தால் வரவேற்கத் தயார் என்று அண்ணா அழைத்ததையும்—'சோ' போன்றவர்கள் உலகத்தார் கண்களுக்கு மறைத்துவிட்டு; தாங்கள் இழந்து விட்ட சொர்கத்தை மீண்டும் எளிதில் பெற்றிட எழுது கோலைத் தூக்கிப் பிடித்திருக்கிறார்கள்!

அண்ணா அவர்களால் தொடங்கப்பட்ட தி.மு.கழகம் பாவத்தில் பிறந்ததாம்

"சபாஷ்! சோ! சபாஷ்! வீரத்தைப் பாராட்டுகிறேன்!" என்று சொல்லத் தோன்றுகிறதல்லவா?

சோடையாகிவிட்டான் தமிழன் — சோரம் போய் விட்டான் தமிழன்—சோதாக்களின் கூட்டத்தில் ஒருவனாகி விட்டான் தமிழன்—தன் சுகமொன்றே போதுமெனச் சுய மரியாதை இழந்து விட்டான் தமிழன்—என்ற நிலையைத் தெரிந்து கொண்டு "சோ" போன்றவர்கள், இன்னும் வேகமாகக்கூடச் சுழற்றுவார்கள் வாளை! நமது இனமானங்கெட எழுதி நிரப்புவார்கள் தாளை! இதைப் பொறுத்துக் கொண்டு தான் இருக்கப் போகிறாயா தன்னலமற்ற தன்மானக் காளை?

அன்புள்ள,

மு. க.

# 3. வீழ்ந்துவிட்ட இனமே! விழித்தெழுக!

## உடன் பிறப்பே,

"பாவம்" என்பதற்கும், "புண்ணியம்" என்பதற்கும் பாமரர்களைச் சுரண்டி வாழ்ந்து கொழுத்தோர் தருகின்ற தெளிபொருள் விளக்கமென்ன? நடைபாதைகளில் வெயிலில் கருகி, மழையில் நனைந்து, இரண்டுமில்லாத இருட்காலங் களில் இல்லற சுகம் காணுகிறார்களே ஏழைகள்—அந்த நிலைமை அவர்கள் செய்த பாவம்! தேன் சிந்தும் மலர் அசைத்து மணம் மொண்டு வீசுகின்ற தென்றலிலே உப்பரி கையில் ஒய்யாரியுடன் சல்லாபித்துக் கிடக்கிறானே இரும்புப் பெட்டிகளுக்கும் வங்கி நிதிகளுக்கும் சொந்தக்காரச் சொகு சுச்சீமான்; அந்த நிலைமை அவன் செய்த புண்ணியம்! விண்ணளாவிடும் கோபுரம் அமைத்துக் கோயில் கட்டி முடிக்கிறானே பக்திமான்—அவன் சூத்திரனாகவோ பஞ்சமனா கவோ இருந்தால் அவன் கட்டிய கோயிலுக்குள் கர்ப்பக் கிரகத்தில் நுழையவும் அனுமதி கிடைக்காமல் தடுக்கப்படு கிறானே, அது அவன் செய்த பாவம்! கோயில் அமைந்திட ஒரு செங்கல்லைக்கூட சேறு குழைத்து வைத்திடாத பிராம ணர்கள் அங்குள்ள சிலையைத் தொட்டு அபிஷேகம் நடத்த- ஆராதனை புரிய—அர்ச்சனை செய்ய—எல்லா உரிமைகளும் படைத்திருக்கிறார்களே; அது அவர்கள் செய்த புண்ணியம்!

இந்தப் பாவ புண்ணிய வேறுபாடுகளைச் சாடியவர்கள் தான் பெரியாரும் அண்ணாவும்; அவர்கள் வளர்த்த இரு கழகங்களின் முன்னோடிகளும்!

இந்த அநியாய வேறுபாட்டை வீழ்த்திட அயராது போரிடுவோம் என்றுதான் தி. க. வும் தி. மு. க. வும் இரட்டைக் குழல் துப்பாக்கி என்று பிரகடனம் செய்தார் அண்ணா!

**"இந்து மதத்தின் மீது சி.என். அண்ணாதுரை பொழிந்த நிந்தனைகள்"** என்று மெத்த கோபத்துடன் 'சண்டே'

இதழில் நண்பர் ''சோ'' அண்ணா அவர்களைச் சாடுகிறார். இந்து மதத்தின் மீது அண்ணாவோ, பெரியாரோ நிந்தனையைப் பொழியவில்லை! பொழிய வேண்டிய அவசியமும் இல்லை! காரணம்; இந்துமதம் என்ற ஒரு மதமே இல்லை! அதற்குக் கர்த்தாக்கள் இல்லை! பழக்க வழக்கங்களுக்கு வந்துவிட்ட நடப்புக்களேயன்றி—பல புராண இதிகாசக் கருத்துக்களின் தொகுப்பேயன்றி-மனுதர்ம சாஸ்திரமென்ற வர்ணாஸ்ரமக் கட்டுப்பெட்டியின் சட்டதிட்டங்களேயன்றி—ஒரு குலத்துக்கொரு நீதி வழங்கும் நடவடிக்கைகளேயன்றி—குறிப்பிட்டுச் சொல்லுகிற மதமாக இந்து மதம் இல்லாத போது அண்ணா அவர்கள் இந்து மதத்தின் மீது எப்படி நிந்தனைகளைப் பொழிந்திருக்க முடியும்! அவர் நிந்தனை செய்ததெல்லாம் இந்துமதம் என்ற பெயரை வைத்துக் கொண்டு மனிதனை மனிதனாக மதிக்காத மதோன்மத்தர்களின் சேட்டைகளைத்தான்! சூதும் வாதும் நிறைந்த சுயநல வாதிகளின் சாத்திரங்களைத்தான்! இந்துமதம் குறித்து அண்ணா அவர்கள் வெளியிட்டுள்ள கருத்து இதோ:—

''இந்து என்ற பதத்திற்கு இது வரையில் ஆராய்ச்சியாளர்களும், சரித்திரம் எழுதினோரும் அகராதிக்காரர்களும் கொடுத்துள்ள பொருள் என்னவென்று கேட்கிறோம். படித்த எவரிடமும் உள்ள ''ஜெம்'' அகராதியில் (Gem Dictionary) பார்க்கட்டும்! மேதாவிகளுக்குத் தோழன் எனக் கருதப்படும் ''சேம்பர்ஸ்'' (Chambers) அகராதியைப் பார்க்கட்டும். பல நாட்டுத் தகவல்களைத் தொகுத்துத் தரும் என்சைக்ளோபீடியாக்களைப் பார்க்கட்டும்! ''இந்து' என்பதற்கு என்ன பொருள் தரப்பட்டிருக்கிறது என்பது விளங்கும். ஒரு டி. ஏ. சாமிநாதய்யர் என்பவர் வெளியிட்டாரே ''ஜெம்'' அகராதி, அதில் ''இந்து'' என்பதற்கு 4;7 ஆம் பக்கத்தில் பொருள் கூறப்பட்டிருக்கிறது. யாது அப்பொருள்? இந்து என்றால் சனாதன தர்மானுசாரி! இந்துஸ்தானம் என்பதற்குப் ''பியர்ஸ் என்சைக்ளோ பீடியா'' தந்துள்ள பொருள் இமயத்துக்கும் விந்தியத்துக்கும் இடையே உள்ள பிரதேசத்தில் ஒரு பகுதி என்பதாகும்.''

பெரும்பாலான பிராமணரல்லாத, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களைத் தங்கள் வசதிக்கேற்ப—நேரத்திற் கேற்ப-தேவைக்கேற்ப-ஆட்டிப்படைத்திடவும், அவதியுறச் செய்திடவும் அவ்வப்போது கிடைத்த வேத புத்தகங்களை—ஸ்மிருதிகளை - படைக் கருவிகளாகக் கொண்டு "இதுதான் இந்துமதம்" என்று மிரட்டப்பட்டதைத் தவிர வரையறுக் கப்பட்ட—வகைப்படுத்தப்பட்ட—சமநீதி வழங்குகிற ஒரு செம்மையான அமைப்பாக அப்படியொரு மதம் உண்டு என்று யாராவது வாதிடத் தயாராக இருக்கிறார்களா? இல்லை! இல்லவே இல்லை!

நடைமுறையில் உள்ள பழக்க வழக்கங்களை யெல்லாம் அவரவர் விருப்பத்திற்கு ஏற்பத் தொகுத்துப் பெயர் கொடுக் கப்பட்ட இந்த மதம் சாதிக்கொரு நீதி வழங்கிடவில்லையா? அதையே மனுஸ்மிருதி என்று கூறிடவில்லையா? பெரியாரும் அண்ணாவும் தனிமனிதர்களாக இயங்காமல் திராவிடப் பேரியக்கத்தை வளர்த்துப் பழமை வாதிகளின் மீதும்—பயங்கர வெறியர்கள் மீதும் தொடுத்த போரின் காரண மாகத்தானே, இந்தச் சமுதாயம் வைகறைப் பொழுதை யாவது கண்டிருக்கிறது! இன்னும் முழுமையாக விடிந்து ஒளி ஞாயிறு உலவிடத் தொடங்கினால்—இருள் சாம்ராஜயத்தின் ஆந்தைகளும் கோட்டான்களும் வௌவால்களும் தங்கள் வெறுப்பைக் கக்கிடத்தானே செய்வார்கள்! அதன் அடை யாளம் தான் "சண்டே" இதழில் "சோ" அவர்கள் காரசார மாகப் பொழிந்துள்ள கண்டனக் கணைகள்! பொல்லாத வார்த்தைகள்! இல்லாத பழிகள்! ஆனால் பாவம்; நம்மை வெல்லாத—வெல்ல முடியாத வாதங்கள்!

1981-ஆம் ஆண்டிலேயே தீண்டாமை உணர்வும்—சாதிக் கொடுமைகளும்—இருக்கின்றன என்றால்; பல ஆண்டு களுக்கு முன்பு அந்த உணர்வுகளும் கொடுமைகளும் சமுதா யத்தை எந்த அளவுக்கு உருக்குலைத்திருக்கும்? அவற்றை எதிர்த்துப் போராடவும் அவற்றிற்கான ஆணிவேரைக் கண்டு பிடித்து அதனை வெட்டி எறியவும் பெரியாரும் அண்ணாவும் பாடுபட்டிருக்காவிட்டால், இன்றைக்கு உத்தி யோகங்களில் யார் நிறைந்திருப்பர்! கல்விக் கூடங்களில் யார் வீட்டுப் பிள்ளைகள் குழுமிக்கிடப்பர்! எந்தப்பிள்ளைகள் மாடுமேய்த்துக் கொண்டிருக்கும்! "சமுதாய அந்தஸ்து" என்ற பெரும் புரட்சியைத் தமிழகத்தில்—தென்னகத்தில்

உருவாக்கி "மனிதரில் நீயுமோர் மனிதன்! மண்ணன்று!" என அறிவுறுத்திக் கைதூக்கிவிட்டுப் பீடு நடை போடச் செய்த பெரியாரும் அண்ணாவும்-தி.க.வும், தி.மு.க.வும்தான் மீனாட்சிபுரங்களுக்குக் காரணம் என்று பழிபோடத் துடிப்பவர்கள்; மீனாட்சிபுரங்களில் மீளா நரகத்தில் கிடப்பதுதான் ஆண்டவன் கட்டளை—அற்புத வேதம் செப்புவது—மனுமாந்தாதாவின் உத்திரவு—என ஒரு காலத்தில் ஓங்காரக் கூச்சலிட்டவர்கள் என்பதை உடன் பிறப்பே; நீ மறந்துவிடாதே!

இதோ நம்மை வளர்த்த அண்ணா எழுதுகிறார் பார்; படி! நன்றாகப்படி! மறந்துவிட்டவைகளை மீண்டும் படிக்கவும், புதிதாக வளரும் இளைய தலைமுறை பழைய வரலாறுகளை அறிந்து கொண்டு நமது பகை எது என்பதைப் புரிந்து கொள்ளவும் — வாய்ப்பளித்துள்ளவர்களுக்கு நன்றி கூறிவிட்டு அண்ணாவின் "ஆரியமாயை" நூலில் இருந்து ஒரு பகுதியை இங்கே தருகிறேன்.

"நெல்லூரில் வக்கீலாக இருந்த ஜானகி ராமமூர்த்தி என்ற பார்ப்பனர் 16-9-36ல் நீலா வெங்கடசுப்பம்மா என்ற திராவிடப் பெண்ணைச் சென்னையில் மணந்தார். இப்பெண் ஒரு ஆரம்பப் பள்ளிக்கூட உபாத்தியாயினி! இவருக்கும் மேற்படி ராமமூர்த்திக்கும் இரு குழந்தைகள் உண்டு. இவர் இரண்டாவது மனைவி முதல் மனைவி ஒரு பார்ப்பன மாது. ராமமூர்த்தி இறந்து விடுகிறார். அவருடைய இரண்டாவது (திராவிட) மனைவி, தனது இரு குழந்தைகளுக்கும் தனக்கும் ஜீவனாம்சம் கோரி 1946-ல் பார்ப்பன மனைவி மீது வழக்குத் தொடர்ந்தாள். ஜில்லா நீதிபதி, அவர்களுக்கு மாதம் 20 ரூபாய் தருமாறு தீர்ப்புச்செய்தார். ஆனால் பார்ப்பன மனைவி அந்தத் தீர்ப்பை எதிர்த்து உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தாள். இவ்வழக்கை நீதிபதிகள் பாண்டுரங்கராவ், சோமையா ஆகிய இரு பார்ப்பன நீதிபதிகள் விசாரித்தனர். இறுதியில் இந்தத் திராவிடர்—ஆரியர் கலப்புமணம் செல்லாது எனத் தீர்ப்பளித்து விட்டனர். இதுபோன்ற ஒரு கலப்பு மண வழக்கில் பார்ப்பனரல்லாத நீதிபதி வெங்கடசுப்பாராவ் கூறியுள்ள தீர்ப்பையும் தவறானது எனக் கூறிவிட்டனர். இந்தத் தீர்ப்பு கால நிலையை ஆதாரமாகக் கொண்டு கூறியதும் அல்ல. சட்ட ஆதரவைக் கொண்டு கூறப்பட்ட தீர்ப்பாக இருக்குமானால் ஜில்லா நீதிபதி தீர்ப்புக்கும்-மற்றொரு வழக்கில் நீதிபதி வெங்கடசுப்பாராவ் கூறி

யுள்ள தீர்ப்புக்கும் எதிரான முரண்பாடு ஏற்பட்டிருக்காது. சட்டமென்றால் எல்லோருக்கும் ஒன்றாகத்தானே அமைந்திருக்க வேண்டும். ஆரிய வேத ஸ்மிருதிகளைக் கொண்டே இத்தீர்ப்பு கூறப்பட்டிருக்கிறது. ஸ்மிருதிகளில் கூறப்படும் நீதிகள் உண்மையில் நீதிகள் அன்று. அவை முழுதும் அநீதிகளாகும். ‘‘பிராமணனால் சூத்திரப் பெண்ணிடத்தில் பிள்ளைபிறந்தால் அவனுக்குத் தந்தையின் சொத்தில் உரிமையில்லை’’யென்று மனு தர்மசாஸ்திரம் ஒன்பதாவது அத்தியாயம் 155-வது சுலோகம் கூறுகிறது. மற்றொன்று மனுதர்ம சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளதையும் உற்று நோக்க வேண்டும். ‘‘பிராமணனுக்கு சூத்திர மனைவியிடத்தில் பிறந்துள்ள புத்திரன், செய்யும் சிரார்த்தமானது பரலோகத்திற்கு உபயோகம் ஆகாததால் அந்தப் பிள்ளை உயிரோடிருந்தாலும் பிணத்திற்கு ஒப்பானவன்’’ என்று மனு தர்மம் அத்தியாயம் 9ல் 178-வது சுலோகம் கூறுகிறது!’’

உடன்பிறப்பே, அண்ணாவின் இந்தக் கருத்துக்களுக்கு அன்றைக்கு வரவேற்பு இருந்த காரணத்தினால் தான்— இன்றைக்கு ஒரு விழிப்புற்ற—ஆம்; ஓரளவு விழிப்புற்ற சமுதாயத்தை நாம் காண முடிகிறது!

இல்லையேல் இன்றைக்கும் மனுதர்மத்தின் அடிப்படையிலேதானே எல்லாக் காரியங்களும் நடக்கும்! பெரியாரும் அண்ணாவும் ஆற்றிய அரிய தொண்டினால்தான் இந்த வெளிச்சத்தையாவது பெற முடிந்தது என்பதை நன்றியுள்ள சமுதாயம் மறுத்திட முன் வருமா?

1946-ஆம் ஆண்டிலேயே இத்தகைய ஸ்மிருதிகளின் கோட்பாடுகளுக்கிணங்க தீர்ப்புக்கள தரப்பட்டன என்றால் அதற்கு முன்பு—தன்மான இயக்கம் உதயமாவதற்கு முன்பு— அநீதியிடை அனலில் புழுவாய்த் துடித்த மக்களின் நிலையை எண்ணிப் பார்க்கவும் முடியவில்லையே!

‘‘மௌண்ட்யம் ப்ராணாந்தி கோதண்டா
ப்ராஹ்மணானாம் வீதியதே
இதரேஷாம்து, வர்ணானாம் தண்ட :
ப்ராணாந்தி கோபவேத’’

இது மனு தர்மச் சட்டம்! பொருள் புரிகிறதா? கொலைத் தொழில் புரிந்த மற்ற வருணத்தாரைத் தூக்கிலிடவேண்டும்

பிராமணன் அத்தகைய குற்றம் புரிந்தால் அவனது தலை மயிரை மொட்டையடித்தலே தண்டனையாகும்! இந்த மனு தர்ம சாஸ்திரத்தைக் கையில் வைத்துக் கொண்டு எந்தக் கொலையும் செய்துவிட்டுத் தலையை மட்டும் மொட்டை யடித்துக் கொண்டால் போதுமென்று உலகை ஏமாற்றிக் கொண்டிருந்தவர்களை அடையாளம் காட்டிய அய்யாவும், அண்ணாவும்தான் பாபிகளாம்! அசிங்கமான நாத்திகவாதி களாம்!

'சோ' சொல்கிறார்! அவர் சொல்வதைப் பொறுத்துக் கொள்ள சோற்றாலடித்த பிண்டங்களல்ல நாம் என்பதைக் காட்டிட வேண்டாமா? விளக்கங்கள் அளிக்கவும் வீழ்ந்து விட்ட இனத்திற்கு வீரக்கனல் மூட்டவும்.

அன்புள்ள
மு.க.

CHENNAI

# 4 ஒரே கல்லில் இரண்டு மாங்காய்

## உடன் பிறப்பே,

நிந்தனையைப் பொழிந்து நம்மை இழிமக்கள் என்றும் ஈனர்கள் என்றும் கடவுள், மத, இதிகாச, புராணங்களின் பெயரால் ஆபாச அர்ச்சனை புரிந்துகொண்டு தாங்கள் மட் டும் கடவுளின் முகத்திலே பிறந்தவர்கள் என்றும் ஊரை ஏமாற்றியவர்கள்; அவர்களது முகமூடியைக் கிழித்தெறிந்த, பெரியாரையும் அண்ணாவையும் நிந்தனையாளர்கள்-ஆபாச மழை பொழிந்தவர்கள்-என்று அக்கினியாஸ்திரம் விடுத்துத் தாக்குவது வேடிக்கையாக இருக்கிறதல்லவா? வேடிக்கை போலத் தோன்றினாலும் பெரும் வேதனையென்பேன் இதனை!

''மாடு தின்னும் புலையா! உனக்கு மார்கழித் திரு நாளா?'' என்று நந்தனைப் பார்த்துக் கேட்ட மமதையா ளர்கள்; ''நந்தனை நேரடியாக ஆட்கொள்ள தில்லை நடராசன் மறுத்துத் தீயிலே இறங்கித் தீட்டுப் போக்கி வரச் சொன்னது நியாயமா?'' என்று கேட்ட பெரியாரையும்

அண்ணாவையும் நிந்தனையாளர்கள் என்று மரத்துப்போன நாக்கு கொண்டு தாக்குவதா?

'நியாயமா?' என்று கேட்பதற்கு நிந்தனையென்று எந்த 'அகரமுதலி' நூலில் பொருள் எழுதப்பட்டிருக்கிறது!

"ஆதியிலும் பறையனல்ல—சாதியிலும்
பறையனல்ல—இப்பப் பாதியிலே
பறையன் ஆனேனே! பெரும் பாவியா
னேனே!"

என்று வி.ஏ. செல்லப்பாக்களையும், எஸ்.ஜி. கிட்டப்பாக்களையும் நாடக மேடையில் பாடச் சொல்லிவிட்டு சிரக்கம்பம் செய்து கொண்டிருந்தவர்கள்; அரிச்சந்திரனுக்கு எதிராக "சந்திரஹரி"யையும், நந்தன் கதைக்கு மாருக "கிந்தனார்" கதையையும் கலைவாணர் என்.எஸ்.கே. போன்றவர்கள் அரங்கேற்றியது கண்டு ஆரம்பித்த அலறல்தானே இன்னமும் 'சோ' உருவிலே தொடர்ந்துகொண்டிருக்கிறது! இந்து மதத்தின் பெயரால் தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்களை—உழைக்கும் வர்க்கத்தினரை—கடவுளின் காலிலே பிறந்தவர் என்றும் கயவர்கள் என்றும்—நிந்தனை செய்தவர்கள் யார்? அந்த நிந்தனை ஆகாது என்று நிமிர்ந்து நின்று எதிர்த்தவர்கள் மீதா நிந்தனையாளர் என்ற சேற்றை வாரி வீசுவது?

"சூத்திரன் நீ! படித்தால் பாபம்! அந்தப் பாபத்தைச் செய்தால் உன் நாக்கைச் சூட்டுக்கோலால் சுட்டுப் பொசுக்க வேண்டும்! இது சாஸ்திரத்தின் கட்டாயம்!" என உரைத்த சூதுமதியினர் நிந்தனையாளர்களா? அவர்தம் சூழ்ச்சியைச் சுக்கானில் மாட்டி "விழி தமிழா! எழு தமிழா! விவேகபுரிக்கு வா தமிழா!" என அழைத்த வீரமிகு தலைவர்களான பெரியாரும் அண்ணாவும் நிந்தனையாளர்களா?

"பஞ்சமன் நீ! உன்னைப் பார்த்தாலே தீட்டு! ஒரு கல் தொலைவு ஒதுங்கிப் போ!" என்று சடைநாயை மடியில் போட்டுத் தட்டிக் கொடுத்துக் கொண்டே, வேதாகமங்களை விரித்துரைத்து மனித சாதியினரில் ஒரு பகுதியினரை விரட்டியடித்த விட நெஞ்சினர் நிந்தனையாளர்களா? அந்த வீணரின் விலா எலும்புடைத்திட, வாழ்ந்திட்ட காலம் முழுவதும்

விளக்கவுரைகளையாற்றி—விழி மூடும் இறுதிநாள் வரையில் —விசையொடிந்து கிடந்த மக்களை வீறு கொண்டெழச் செய்திடத் தொண்டாற்றிய தூயவர்களாம் பெரியாரும் அண்ணாவும் நிந்தனையாளர்களா?

இந்து மதக் கடவுள்கள் மீது ஆபாச அர்ச்சனைகளை ஈ. வெ. ரா. மழையாகப் பொழிந்தார் என்று 'சண்டே' ஏட்டில் அந்தக் கட்டுரையாளர் சண்டமாருதம் கிளப்பியிருக்கிறார்.

**"ஒரு வேசி, தனக்குப் பிறந்த குழந்தையை வீசி எறிவதைப் போல, எதிர்ப்பு ஏற்பட்டது என்பதற்காக - தனுடைய முக்கிய கொள்கையை அண்ணாதுரை விட்டு விட்டார்."**

இப்படி நண்பர் சோ, 'சண்டே' இதழில் எழுதியிருப்பதில் எந்த விதமான ஆபாசமும் இல்லையாம்! அடடா! எவ்வளவு அருமையான—ஆபாசமற்ற—உவமையைச் சோ அவர்கள் கண்டுபிடித்து எழுதியிருக்கிறார். இவர்தான் ஆபாசத்தைப் பற்றி எழுதிடத் தகுதியுள்ளவர் என்று தன்னைக் கருதிக் கொண்டிருக்கிறார். பிரிவினைக் கொள்கையை 1962ல் அண்ணா அவர்கள் கழகப் பொதுக்குழுவைக் கூட்டிக் கை விட்டதைத்தான் 'சோ' இவ்வாறு வர்ணிக்கிறார்!

வேசித்தனம் செய்து பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று ஸ்மிருதிகள் அனுமதிப்பதைச் 'சோ' படிக்காதவரல்ல! அந்த ஸ்மிருதிகளையெல்லாம் இப்போது யார் நினைவில் வைத்திருக்கப் போகிறார்கள் என்று அவர் நம்பியிருக்கக் கூடும்! தனது கணவன் இறந்து விட்டாலோ அல்லது புத்திரப்பேறு உண்டு பண்ணத் தகுதியற்று விட்டாலோ புத்திரப்பேற்றை விரும்புகிற ஒரு பெண், பெரியோர்களின் அனுமதியுடன் ருது காலத்தில் உடம்பில் நெய்யைப் பூசிக்கொண்டு தன் கணவனது சகோதரனையோ, அல்லது அந்தக் குலத்தில் யாரையோ கூடி மகிழ்ந்து கருத்தரிக்கிற வரையில் குலவிக் கிடக்கலாம் என்று யாக்ஞவல்கியர் கூறுவதாக ஸ்மிருதி கூறுகிறது! இத்தகைய ஆபாசக் களஞ்சியங்களை அடையாளம் காட்டியதற்காகத்தான் பெரியாரையும் அண்ணாவையும் தி.க., தி.மு.க. ஆகிய இரு இயக்கங்களையும் "ஆபாச அர்ச்சனை பொழிவோர்" என குற்றம் சாட்டிக்

குதூகலிக்கிறார் நண்பர்! அதனால்தான் அண்ணா அவர்கள் பிரிவினைக் கொள்கையை விட்டதற்கான காரணத்தை இவர் நரகல் நடையில் எழுதிக் காட்டுகிறார்! பாவம்; இவருக்குப் பழகிப் போன நடை அது.

இந்து மதக் கடவுள்கள் எனச் சொல்லப்படுவோர் மீது ஆபாசக் கதைகளை எழுதிக் குவித்திருப்போர் ஆபாச மழை பொழிந்தவர்களா? அந்தக் கதைகளை நம்பாதே என்று காடுமேடு சுற்றிக் கடும் பயணம் மேற்கொண்டு சூறாவளிப் பிரச்சாரம் செய்த சுயமரியாதைச் சுடர் பெரியார் ஆபாச மழை பொழிந்தவரா?

அரிக்கும் அரனுக்கும்—அதாவது ஆணுக்கும் ஆணுக்கும் பிறந்தவர்தான் அய்யனார் என்பது ஆபாசமில்லையாம்! அதை ஏற்க மறுப்பது ஆபாசமாம்'

தாருகாவனத்து ரிஷிபத்தினிகளைச் சிவனார் கற்பழித்த கதை ஆபாசமில்லையாம்; அதை ஆபாசம் எனக் கூறியது ஆபாசமாம்!

நாரதர் பெண்ணுருக் கொண்டு கண்ணனைக் கூடி அறுபது ஆண்டுகள் என்ற பிள்ளைகளைப் பெற்றது ஆபாசமில்லையாம்! அதை ஆபாசமென அறிவிப்பது தான் ஆபாசமாம்!

முழு நிர்வாணமாக வந்து அன்னம் பரிமாறுக என்று அனுசூயாவைப் பார்த்து மும்மூர்த்திகளும் கோரியது ஆபாசமில்லையாம்; இந்த முட்டாள்தனங்களை நம்பாதீர் என முழக்கியது ஆபாசமாம்!

திரைப்படங்களைத் தி.மு.கழகம், நாத்திகப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தியதாம்! 'சோ' தான் சொல்லுகிறார்!

அண்ணா எழுதிய வேலைக்காரி படத்தில் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கருத்துதான் வலியுறுத்தப் பட்டது!

"கோயில் கூடாதென்பதல்ல; கோயில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது" என்றுதான் பராசக்தி படத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது!

"ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்!" என்று முழக்கிய முண்டாசுக் கவிஞர் பாரதியை ஏற்றுக் கொள்வார்களாம்—"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என உரைத்திடும் தி.மு.க.வினர் நாத்திகர்களாம்! பெரியாரும் அண்ணாவும் செய்த நாத்திகப் பிரச்சாரத்தால்தான் மீனாட்சிபுரத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறிவிட்டார்களாம்!

மீனாட்சிபுரத்தில் மதம் மாறியவர்கள் எம்மதத்திற்குச் சென்றுள்ளனர்? அல்லாவைத் தொழுகின்ற முஸ்லீம் மதத்திற்குத்தானே சென்றார்கள? அந்த மதம் என்ன — "நாத்திக மதம்" என்று சோ அவர்கள் வாதிடுகிறாரா?

தி.மு.க.வினர் எழுதிய அல்லது தயாரித்த சினிமாக்களால் சினிமா பார்க்கிற ஒவ்வொருவரும் இந்து மதத்தைக் கண்டிக்கிற நிலைமை ஏற்பட்டதாக ஆதங்கப்படுகிறார் நண்பர்!

ஒரு பிராமண குடும்பத்துப் பெண் வழுக்கி விழுந்து விடுகிற நிலைமையைச் சித்தரிக்கும் "அரங்கேற்றம்" திரைப் படத்தைத் தி.மு.க.வினர் தயாரிக்கவில்லையே! தயாரித்தவர் யார் என்பது சோவுக்கும் தெரியும்—நாட்டுக்கும் தெரியுமே!

முதியவரை மணந்த முல்லையரும்பனையாள் சாவித்திரி, இளங்காளையொன்றைத் தேடித் தழுவிக் கிடந்த கதையை "ஆச்சாரம் போச்சு" என்று ஆர்ப்பாட்டம்கூட நடத்துகிற அளவுக்கு தயாரிக்கப்பட்ட படத்தை—தி.மு.க.வினர் எடுத்திடவில்லையே! எடுத்து வழங்கியவர் எவர் என்று 'சோ' உட்பட எல்லோரும் நன்கறிவரே!

அறிந்திருந்தால் என்ன; அள்ளியிறைப்போம் புழுதியை என்று திட்டமிட்டுக் கொண்டு அந்த வட்டாரத்திலே சிலர் இத்தகைய ஆயுதங்களை ஏந்திப் புறப்பட்டிருக்கின்றனர்.

அந்தோ, பரிதாபம்— துருப்பிடித்துப் பழுதுபட்டுப் போன ஆயுதங்கள்! உடைந்த வாட்கள்! ஒடிந்துபோன ஈட்டிகள்!

சமுதாய மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டும்—எதிர் நீச்சல் போட்டு இலட்சியங்களை வளர்த்து—நாகரிகம் வளர்ந்த காலத்திலும், "நமக்குரியது—கடவுள் காட்டியது காட்டு மிராண்டி வாழ்க்கைதான்" எனக் கைகட்டி வாய் புதைத்து விதியை நொந்து கிடந்த பெரும்பாலான மக்களின் உள்ளத்திலே புரட்சி வித்தினை ஊன்றி அவர்களை எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையொளியுடன் நடைபோடச் செய்திட்ட இயக்கங்கள்தான் தி.க.வும் தி.மு.க.வும் என்பதைத் திசை திருப்பிட 'சோ' போன்ற நண்பர்கள் எடுத்திடும் முயற்சிகள் மீண்டும் சுமார் அறுபது ஆண்டுக் காலத்திற்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்திற்கே வழி வகுக்கும் என்பதை நினைவூட்டவும் எச்சரிக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

**"முதலமைச்சராகக் கருணாநிதி பதவியில் இருந்த காலத்தில் இந்துக்களின் நம்பிக்கை மீது அதிகாரபூர்வமாகக் கட்டவிழ்த்துவிட்ட அவதூறுடன் கூடிய ஏளனம்."**

பெரியார் பொழிந்த ஆபாச அர்ச்சனை, அண்ணா பொழிந்த நிந்தனை, அந்தப் பட்டியலிலே இப்படியொரு குற்றச்சாட்டையும் என்மீது சுமத்தி, இந்த மூவரும்—தி.க. தி.மு.க. ஆகிய கட்சிகளும்தான் மீனாட்சிபுர மத மாற்றத்திற்குக் காரணமே தவிர, சாதி வெறியல்ல என்று 'சண்டே' இதழில் கட்டுரையை முடிக்கிறார் நண்பர்!

"ஆபாச அர்ச்சனை!"

"நிந்தனை!"

என்பவைகள் எப்படி ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களோ—அப்படித்தான் "அவதூறுடன் கூடிய ஏளனம் அதிகார பூர்வமாக" என்பதுமாகும்!

உடன்பிறப்பே, இதில் விசித்திரம் என்னவென்றால் குற்றத்தின் மொத்த உருவங்கள்; அத்தக் குற்றங்களை மறைத்துக் கொண்டு—தங்களைக் குணாளர்கள் என்று காட்டிக் கொள்ளவும்—அதே நேரத்தில் உண்மையான திராவிடர் இயக்கங்களான தி.க., தி.மு.க.—ஆகிய கட்சிகளை அழித்து ஒழித்திடவும்—ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கக் கிளம்பியுள்ளார்கள்—அவ்வளவுதான்!

அன்புள்ள,

மு.க.

# 5. உண்மை உள்ளங்கை நெல்லிக்கனி

உடன்பிறப்பே,

நெருக்கடி நிலை (எமர்ஜன்சி)யைக் கொள்கை ரீதியாக எதிர்த்து அதில் இறுதிவரையில்—"எமர்ஜன்சி" நீக்கப்படும் வரையில்—உறுதியாக இருந்தவர்கள் நாம்! அந்த உறுதியான கொள்கை அறிவிப்பின் காரணமாக நமது கழகம் பல இன்னல்களைச் சந்தித்துக் கடைசியாகக் கழக அரசு கலைக்கப் பெற்று முன்னூறுக்கு மேற்பட்ட கழகத்தினர் சிறைக் கோட்டங்களில் ஓராண்டுக்காலம் வாடிய பொழுது—பல்வேறு சோதனைகள் கழகத்திற்கு வந்த பொழுது—அற்றகுளத்து அறுநீர்ப் பறவைகளான சந்தர்ப்பவாதிகள் சதிவலை பின்னிடவும்—முதுகில் குத்திடவும் மும்முரமாக ஈடுபட்டு, இருந்தவரையில பதவி பவிசுகளை அனுபவித்து விட்டு—பின்னர் பச்சை கண்ட இடத்திற்கு இச்சை கொண்டு பாய்ந்து விட்ட பொழுது—வாழ்விலும் தாழ்விலும் ஒன்றாக இருப்போம் என்று சூளுரைத்து வாய்மையுள்ள தலைவர்கள் சிலரும் முன்னணித் தளபதிகள் சிலரும் பக்கமிருந்து ஊக்கமளித்திடவும்—உன்னைப் போன்ற உயிரனைய உடன் பிறப்புக்கள் என்னைச் சூழ்ந்து நின்றிடவுமான நிலை இன்று போல் அன்றும் இருந்ததே; அப்பொழுது—கவர்னர்—ஆட்சியின் தணிக்கைக்கும் தப்பிய கடிதமொன்று முரசொலியில் வெளிவந்தது! 1976 மே திங்கள் ஐந்தாம் நாள் சென்னைப் பதிப்பு முரசொலியில் வெளி வந்த கடிதம் அது! அதிலிருந்து சில குறிப்புகளை மட்டும் இப்போது கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இந்துக்களின் நம்பிக்கைமீது அவதூறுகளையும் ஏளனங்களையும் அதிகாரப்பூர்வமாகக் கட்டவிழ்த்து விட, கருணாநிதி, தனது முதலமைச்சர் பதவியைப் பயன்படுத்தினார் என்று "சண்டே" ஆங்கில இதழில் நண்பர் "சோ" சாட்டியுள்ள குற்றச்சாட்டு எவ்வளவு போலியானது என்பதை நீ விளங்கிக் கொள்வதற்காகத்தான், ஐந்தாண்டுகளுக்கு

முன்பு, ஆட்சியைவிட்டு இறங்கியபோது எழுதியுள்ள நீண்ட கடிதத்தின் சில பகுதிகளை இங்கே நினைவூட்டுகிறேன்.

"கடவுள் கொள்கையில் தந்தை பெரியார் மிகவும் தீவிரவாதி! கடவுளே இல்லை என்று மறுப்பவர்!

உண்டென்பார் சிலர் இல்லையென்பார் சிலர் எனக்கில்லை கடவுள் கவலை—என்று பாடியவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமூலர் கொள்கையே தி. மு. கழகத்தின் கடவுட் கொள்கையென அறிவித்தவர் அண்ணா.

ஆத்திகப் பெரியோர் கூடியதோர் அவையில் என்னைப் பற்றிக் குறிப்பிட்ட பண்டார சன்னதிகள் ஒருவர் "கருணாநிதி அவர்கள் கடவுளை ஏற்றுக் கொள்ளமாட்டார் என்றாலும், கடவுள் காரியங்களுக்கு அவர் ஆட்சி குறுக்கே நிற்கவில்லை" என்றார். அதற்கு விடையளித்த நான், "கடவுளை நாம் ஏற்றுக்கொள்வது பெரிதல்ல, கடவுள் நம்மை ஏற்றுக் கொள்கிற அளவுக்கு நாம் நடக்கிறோமா என்பதுதான் முக்கியம்" என்று சுட்டிக் காட்டினேன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற கவி தாகூரின் தத்துவத்தைத் தான் அறிஞர் அண்ணாவும் அவர் அமைத்த கழக அரசும் செயல்படுத்தியதை நினைவூட்டுகிறேன்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வடலூர் வள்ளலாரின் கருத்தாழமிக்க வரிகளை மறவாமல் கடவுட் பணியென்பது என்னவென்றுதெளிவாக உணர்ந்து காரியமாற்றியதுதான் கழக அரசு!"

உடன்பிறப்பே, 1976-ல் எழுதிய அந்தக் கடிதத்தின் முகப்புரையில் ஒரு பகுதிதான் இது!

கடவுள், மதம், சடங்குகள் போன்றவற்றில் பண்டித நேரு அவர்கள் எத்தகைய கொள்கை கொண்டிருந்தார்— அவர் மறைந்த பிறகு கிடைத்ததும் அவரால் எழுதப்பட்டது

மான உயிலில் நேரு அவர்கள் தனது உடலுக்கு எந்தவித மான மதசம்பிரதாயமான சடங்குகளும் கூடாது என திட்ட வட்டமாகக் கூறியிருந்தாரா இல்லையா? பகவத்சிங்கைப் போல "நான் ஏன் நாத்தீகன் ஆனேன்?" என்ற புத்த கத்தை எழுதாவிட்டாலும் நேரு அவர்கள் நாத்திகராகவே விளங்கினார் என்பதை நாடறியாதா என்ன? அவர் தனது நாத்தீகக் கொள்கையை ஆட்சியில் எப்படித் திணிக்க முற்படவில்லையோ அதைப் போலத்தான்; "ஒன்றேகுலம்—ஒருவனே தேவன்" என்ற தி.மு.க.வின் கொள்கையை அதிகாரத்தைப் பயன்படுத்தித் தி.மு.க. அரசு, யார்மீதும் திணிக்க விரும்பவில்லை!

அப்படித் திணிக்க நினைத்திருந்தால், குடந்தையில் நடைபெற்ற மகாமகத் திருவிழாவுக்கு வரும் மக்களுக்கு வசதிகள் செய்து தர அண்ணா தலைமையில் பொதுப்பணி அமைச்சராக இருந்த நான் குடந்தையிலேயே தங்கியிருந்து சுற்றுச்சாலைகளை அமைத்திடும் பொறுப்பை ஏற்றிருந்திருக்க மாட்டேன்! அப்போது சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த குடந்தை நண்பர் காசிராமன் அவர்கள் தி.மு.க. ஆட்சியில் மகாமகத் திருவிழாவிற்குச் செய்யப்பட்ட ஏற்பாடுகளைப் பாராட்டி அவையிலேயே பேசியிருக்கிறார்.

எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு மன்னர் காலத்தில் கட்டப்பட்டுப் பழுதடைந்து கிடந்த திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத் திருப்பணியில் அறநிலையத்துறை அக்கறை காட்டி, குட முழுக்கும் நடத்தக் காரணமாக இருந்தது தி.மு.க. ஆட்சிதான்!

சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில், பேரூர் பட்டிப் பெருமாள் கோயில், சென்னை வடபழனியாண்டவர் கோயில், பழனி தண்டாயுதபாணி கோயில் விமானம், சுவாமி மலை கோயில், கொடுமுடி மகுடேஸ்வரசாமி கோயில், திருவண்ணாமலை அருணாசலசாமி கோயில், திருவில்லிப் புத்தூர் ஆண்டாள் கோயில், கிருஷ்ணாபுரம் கிருஷ்ணன் கோயில் இப்படி பட்டியல் நீண்டு கொண்டே போகும்—பெரிதும் சிறிதுமான சுமார் ஐயாயிரம் கோயில்களின் திருப்

பணி நடைபெற்றும்—குடமுழுக்குகள் நடந்தேறியுமுள்ள தற்கான புள்ளி விவரங்களைத் தர முடியும், தி.மு.க. ஆட்சியில் அறநிலையத்துறையின் அருமுயற்சியோடு!

**இதயத்தில் பதிந்திருக்கிற கொள்கைக்கும் ஏற்றுக் கொண்டிருக்கிற பொறுப்புக்கும் மாசு வராமல காப்பாற்று கிற கடமையைக் கழக அரசு செய்துள்ளது என்பதற்கு இவைகள் எடுத்துக்காட்டுகள் அல்லவா?**

அனாதைச் சிறுவர்களுக்காக அரசு உதவியுடன் ஆலயங்கள் சார்பில் கருணை இல்லங்கள் திறந்தபோது மயிலையில் கபாலி கோயிலில் உரையாற்றிய வாரியார் என்ன சொன்னார்!

> ''முதல்வர் கலைஞர் செய்யும் இதுபோன்ற நல்ல காரியங்களைப் பார்த்து, 'நல்ல காரியம் செய்தாரப்பா முதல்வர்' என்று எம்பெருமானே மகிழ்வார்!''

வாரியார் இப்படிப் பாராட்டினார்—ஆனால் நண்பர் சோவோ வாரியிறைக்கிறார் சேற்றைத் தி.மு.க. ஆட்சியின் மீது!

1979-ம் ஆண்டு நடைபெற்ற சுயமரியாதை மகாநாட்டிலே பெரியார் கொண்டு வந்த தீர்மானம்; ஆலய நிதியைக் கொண்டு அனாதைக்குழந்தைகளை வளர்த்துக் கல்வி அளிக்க வேண்டும் என்பதாகும். அது 1959-ல் காமராசர் காலத்தில் சட்டமானது! கழக ஆட்சிக் காலத்தில் விரிவாக செயல்படத் தொடங்கியது!

அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்து மதத்தின் மீது அவதூறும் ஏளனமும் நான் பதவியில் இருந்தபோது என்னால் நடத்தப்பட்டதாகச் ''சோ'' குற்றம் சாட்டுகிறாரே; மேலே குறிப்பிட்டவைகள்தான் அந்த அவதூறும் ஏளனங்களுமா?

கோயில் அறங்காவல் குழுக்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர் ஒருவர் கட்டாயம் இடம் பெற வேண்டுமென்று சட்டத்தில் வகைசெய்து கழக ஆட்சியின் போது இரண்டாயிரம் பேர் அறங்காவலர்களாக ஆக்கப்பட்டார்களே; அதைக் குற்றமென்கிறார்களா?

தகுதி படைத்த அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வரலாம் என்று சட்டம் கொண்டு வந்ததே கழக அரசு அதைத்தான் அவதூறு — அக்கிரமம் — என அடுக்குகிறாரா?

சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையை ஏற்று (வி.ஐ.பி.) முக்கியஸ்தர்களுக்கு ஆலயங்களில் கட்டப்படும் பரிவட்டம், எடுக்கப்படும் பூரண கும்பம் ஆகிய தனி மரியாதைகளை நிறுத்தியதே கழக அரசு; அதைக் குற்றமெனக் கூவுகிறாரா?

அறநிலையத்துறை மானிய விவாதமே சட்டப் பேரவையில் நடக்காமல் இருந்த நிலையை மாற்றி 1970 ஆம் ஆண்டு முதல் அத்துறைக்கெனத் தனி அமைச்சரும்—பேரவையில் தனி விவாதமும் தொடங்குவதற்குக் கழக அரசு வழி வகுத்ததே; அதனைத் தவறு எனத் தாக்குகிறாரா?

அறநிலையத் துறையின் பொறுப்பில் 1967 வரையில் 9,600 அறநிலையங்கள் மட்டுமே இருந்ததை அறிந்து, தனி அலுவலர் நியமித்து ஐந்து ஆண்டுகளில் நடந்த ஆய்வில் மட்டும் (1971 முதல் 1976) சுமார் நாற்பத்தி இரண்டாயிரம் (42,000) அற நிலையங்களையும் அவற்றுக்குச் சொந்தமான இரண்டு லட்சம் ஏக்கா நிலங்களையும் தனியார்களின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்து அறநிலையத்துறை பொறுப்பில் கொண்டு வர முயற்சி மேற்கொண்டு அப்போதே இருபத்தி ஐயாயிரம் அற நிலையங்களையும் அறுபத்தி ஐயாயிரம் ஏக்கர் நிலங்களையும் கொண்டு வந்ததே கழக அரசு; அதைத்தான் இமாலயத் தவறு என இயம்புகிறாரா?

1967ல் தமிழ்நாட்டுக் கோயில்களின் மொத்த வருமானம் ஆண்டுக்கு மூன்று கோடி ரூபாய்! இடையே ஏற்பட்ட தவறுகளைக் களைந்த காரணத்தால் 975-ல் ஆண்டுக்குப் பனிரெண்டு கோடி ரூபாயாக அந்த வருமானம் ஆகியதே அதைப் பெரும்பிழையெனத் தூற்றுகிறாரா' இந்த 'தூயவர்'?

தஞ்சை மாவட்டத்தில் ஒரு கோயிலில் உள்ள சுவாமியின் பெயரை தன்னுடைய பிள்ளைக்கு வைத்து, ஆண்டவன் பெயரால் இருந்த சொத்துக்களை தன் குடும்பத்துக்குச்

சொந்தமாக்கிக் கொண்டார் ஒரு பரம்பரை தர்மகர்த்தா! கழக ஆட்சியில் அது கண்டுபிடிக்கப்பட்டு வழக்கு தொடரப் பட்டதே; அதை இந்து மதத்திற்கு இழைக்கப்பட்ட அவ தூறு எனக் கழக அரசின் மீது களங்கம் கற்பிக்கிறாரா நண்பர்?

இப்படிப் பல தர்மகர்த்தாக்கள் பக்திப் போர்வையில் நடத்திய பயங்கரக் கொள்ளைகளைத் தடுத்து, ஆலயத்துச் சொத்துக்களைக் காத்திட்ட முயற்சிகளை ஆதாரப்பூர்வமான புள்ளி விபரங்களுடன் அப்போதே கழக அரசு பட்டியல் போட்டுக் காட்டியிருக்கிறது!

இருபதாண்டுக் காலம் ஓடாமல் இருந்த திருவாரூர் தேர் ஓடுவதற்குக்கூட தி.மு.க. ஆட்சியில்தான் தேரோடும் வீதிகள் செப்பனிட்டுத் தரப்பட்டன என்பதை அப்போதே பக்தர்கள் பலர் பாராட்டியுள்ளனர் என்பதை நண்பர் அறி வார்! இருப்பினும் ஓடுகிற ஓட்டத்தில் புழுதி அள்ளி இறைப் பதிலே இவர் போன்றோர்க்கு ஒரு தனி மகிழ்ச்சி!

இல்லாவிட்டால்—தி.க., தி.மு.க. ஆகிய இரு கட்சி களாலும் பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகிய மூவரின் கடந்த காலப் பிரச்சாரங்களாலும், நடவடிக்கைகளாலும் தான்—மீனாட்சிபுரத்தில் மத மாற்றம் ஏற்பட்டதென்று எழுதிட முன்வருவாரா?

நம்மையும், நமது இரு இயக்கங்களையும் பொறுத்துக் கொண்டு தமிழர்கள் அமைதியாக இருக்கிறார்கள் என்று ஆச்சரியத்தை வெளியிட்டுக் கட்டுரையை முடிக்கிறார் நண்பர் சோ!

யார், யாரைப் பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை உணர்ந்தவர்களுக்குத் தெரியும்!

ஆனால் ஒன்று உடன்பிறப்பே! உண்மையான—உறுதி யான—திராவிடர் இயக்கங்கள் எவை என்பதையும், பெரியார் அண்ணா கொள்கை வழி நடப்பவர்கள் யார் என்பதையும் கலையாத ஓவியமாக—அழியாத சித்திரமாக—அவரையும் அறி

யாமல் தமிழ் மக்களுக்குத் தீட்டிக்காட்டியமைக்காக சோவுக்கு நன்றி கூறி—இந்தத் தொடர் கடிதங்களை முடிக்கிறேன்.

அன்புள்ள

மு.க.

# இளைஞர்களே வீறு கொள்வீர்!

**''விஞ்ஞான யுகத்தை நாடி வேக நடை போடுகின்ற உலகில் மற்ற நாடுகள்; ஆனால், இன்னமும் புராணக் கதைகளை நம்பிச் சீரழிகின்றனர் நம் மக்கள். இந்நிலை போக்கி—விஞ்ஞான ரீதியான சமுதாயத்தை ஏற்படுத்த இளைஞர்களே வீறுகொண்டு எழுவீர்'' என்று ஈரோடு சிக்கைய நாயக்கர் கல்லூரி மாணவர் பேரவை விழாவில் உரையாற்றிய தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.**

தலைவர் கலைஞர் அவர்கள் உரை வருமாறு:—

நான் இதற்கு முன்பு ஒரு முறை இந்தக் கல்லூரிக்கு வந்திருந்தேன். அந்த நேரத்திலும் மாணவர்கள் என்னிடத்திலே கோரிக்கை வைத்தார்கள். இன்றும் என்னிடத்திலே மாணவ நண்பர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

நான் எந்த இடத்திலே இருந்தாலும் கோரிக்கைகளுக்காக வாதாடக் கூடியவன்; நிறைவேற்றக் கூடியவன். போராடக்கூடியவன் என்பதை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிற காரணத்தாலேதான்...

''அந்தநாள் வந்திலை அருந்தமிழ்ப்புலவோய்
இந்தநாள் வந்துநீ நொந்தெனை அடைந்தாய்''

என்று குமணன் பாடியதுபோல நான் இருந்தாலும்கூட

''தலைதனைக் கொண்டுபோய் தம்பி கைகொடுத்து
விலைதனைப் பெற்றுன் வறுமை நோய் களையே''

என்று கூறுகின்ற அந்த உள்ளத்தினைப் பெற்றவன் என்ற நம்பிக்கையோடு இங்கே என்னிடத்திலே இந்தக் கோரிக்கைகளை வைத்திருக்கிறீர்கள் என்று நான் கருதுகிறேன்.

இந்தத் திறப்பு விழாவிலே இன்னும் பல பேர் பேசுவதாக அழைப்பிதழிலே இருந்தாலும் கூட, எல்லோருக்குமாகச் சேர்த்து கல்லூரியினுடைய முதல்வர் இங்கே பேசிவிட்டார்.

அவர் இங்கே பேசிக் கொண்டிருந்தபோது நண்பர் வீரமணியிடம் இவர்தான் மாணவர் பேரவையின் தலைவரா என்று கேட்டேன். அவர் "இல்லை, இல்லை; இவர்தான் கல்லூரியின் முதல்வர்" என்று சொன்னார்.

எனக்கு மாணவர் பேரவையின் தலைவர் தம்பி முகமதலியைத் தெரியும் என்றாலும்கூட, கல்லூரி முதல்வர் இங்கே பேசும் போது, அந்தப் பேச்சில் காணப்பட்ட வீரமும், துடிப்பும்—மிடுக்கும்—ஏன் நடிப்பும்கூட—நடிப்பு என்றால் போலி நடிப்பு அல்ல; வந்து விழுந்த சொற்கோவைகளுக்கு ஏற்றாற் போன்ற அபிநயங்களைத்தான் குறிப்பிடுகிறேன்-அவைகளை வைத்துப் பார்க்கும்போது இந்தக் கல்லூரியிலே பயிலுகின்ற நீங்கள் எல்லாம் எப்படிப்பட்ட அரிமாக்களாக—புலிப் போத்துகளாக—இந்தக் கல்லூரியிலே இருந்து வெளியேறுவீர்கள் என்ற நிறைந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

இவர் கல்லூரி முதல்வராக வரவேண்டும் என்கின்ற கருத்தினை தந்தை பெரியார் அவர்கள் கொண்டிருந்தார் என்று தாளாளர் என்னிடத்திலே சொன்னார்கள்.

ஆக பெரியார் அவர்களுடைய தேர்வுகள் எப்படி இருக்கும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

அவர் குறைந்த நேரம்தான் பேசினார் என்றாலும் தமிழ்ச் சமுதாயத்தினுடைய விழிப்புக்காகவும், தமிழ் மொழியினுடைய ஏற்றத்திற்காகவும், தமிழ் மொழியினுடைய வளத்துக்காகவும், வலிவுக்காகவும், பொலிவுக்காகவும் அவர் இங்கே நல்ல பல கருத்துக்களை எடுத்துக் கூறி இருக்கிறார்.

மாணவர்களுக்கெல்லாம் ஒரு ஆறுதல். எனக்கு மாலை அணிவித்த நேரத்திலும் கைத்தறி ஆடைகளை அணிவித்த

நேரத்திலும், உலகத் தமிழ் மாநாடு போல நாங்கள் இந்த மாணவர் கூட்டத்தை ஏற்பாடு செய்து இருக்கிறோம் என்று சொன்னார்கள்.

## குருவி ராமேஸ்வரம்!

ராமாயணத்திலே ஒரு கர்ண பரம்பரைக் கதை உண்டு. ராமர் சீதையைத் தேடி அலைந்து கொண்டிருந்தபோது எங்கள் திருவாரூருக்குப் பக்கத்தில் வந்தாராம்.

அப்படி வந்தபோது அவரை வணங்கி ஒரு குருவி, எனக்கு ஒரு வரம் வேண்டும் என்று கேட்டதாம்; என்ன வரம் என்று ராமன் கேட்டபோது நான் ராமேஸ்வரத்திற்குச் செல்ல வேண்டும் என்று அந்தக் குருவி வரம் கேட்டதாம்.

குருவியினுடைய சிறகுகள் மிகச் சிறியது. ராமேசுவரமோ தொலைவிலே இருக்கின்ற ஊர். அவ்வளவு தூரம் உன்னால் பறந்து செல்ல முடியாது, எனவே குருவியே, உனக்காக இங்கேயே ஒரு ராமேஸ்வரத்தை உண்டாக்குகிறேன் என்று தன்னுடைய அம்பின் முனையால், அங்கே ஒரு கோடு போட்டு, ஒரு சிறிய குளத்தை—அங்கே உண்டாக்கி, இதிலே குளித்தால் உனக்குப் புண்ணியம் கிடைக்கும் என்றாராம்.

குருவியும் ராமனுடைய பேச்சைக் கேட்டு அவனுடைய அம்பால் வரையப்பட்ட அந்தக் குளத்தில் குளித்து, புண்ணியம் பெற்றதாகக் கதை. இப்பொழுதும் அந்த ஊருக்கு குருவி ராமேஸ்வரம் என்று பெயர்.

அதைப்போலத்தான் ராமேஸ்வரம் போக முடியாத எனக்கு நீங்கள் இங்கேயே ஒரு ராமேஸ்வரத்தைக் காட்டி, உலகத் தமிழ் மாநாட்டிற்குச் செல்ல முடியாவிட்டாலும், அங்கே நான் செல்வதற்கேற்ற தன்மான உணர்வுகள் அடைக்கப்பட்டது என்ற காரணத்தினால், குருவிக்கு ராமேஸ்வரத்தை ராமன் உருவாக்கித் தந்ததைப்போல், உனக்கும் ஒரு உலகத் தமிழ் மாநாட்டை இங்கே உருவாக்கி இருக்கிறோம் என்று, உங்களுடைய பாசம் பொழிகின்ற

இதயத்தின் சார்பாக இதை உலகத் தமிழ் மாநாடு என்று நீங்கள் சொன்னீர்கள்.

ஒவ்வொருவருடைய உள்ளமே ஒரு உலகம்தான். ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஒரு உலகம் இருக்கிறது.

நாம் உலகத்தையே படிக்கிறோம். உலகத்தைப் படிக்கின்ற காரணத்தால்; ஒவ்வொருவரும் தங்கள் உள்ளங்களில் ஒரு உலகத்தை அடக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட நல்ல உள்ளங்கள்—விரிவான உள்ளங்கள்—முன்னேற்றப் பாதையை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கின்ற உள்ளங்கள்—மாணவ உடன்பிறப்புக்களின் உள்ளங்கள் என்கின்ற காரணத்தினால்—அந்த உள்ளங்களில் சில கருத்துக்களை பெரியார் பிறந்த இந்த பூமியில் நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மண்ணில் நான் பல ஆண்டுக்காலம் உலவி இருக்கின்றேன் என்றாலும், தந்தை பெரியார் அவர்களுடைய பயிற்சிப் பள்ளியில்—அவருடைய அலுவலகத்திலே பணியாற்றுகின்ற வாய்ப்பை ஏற்று ஏறத்தாழ இரண்டாண்டுக் காலம் அவரோடு குடியரசு அலுவலகத்தில், அவருடைய மாளிகையில், அவருக்கு அருகில் அமர்ந்து உண்ணுகின்ற வாய்ப்பைப் பெற்று—அவர் தருகின்ற ஊதியத்தைப் பெற்று—அவர் நடத்திய குடியரசுப் பத்திரிக்கையின் துணையாசிரியன் என்கின்ற பொறுப்பை ஏற்று—பயின்றவன்-பகுத்தறிவு பெற்றவன்—என்னுடைய நண்பர்கள் எல்லாம் அடிக்கடி சொல்லுவது போல துணிவை அவரிடத்திலே இருந்து பெற்றவன்; கனிவை காஞ்சிபுரத்திலே இருந்து பெற்றவன்.

அந்த வகையிலே பெரியார் பிறந்த இந்த மண்ணில் அமைந்திருக்கின்ற இந்தக் கல்லூரியினுடைய குழுவிலே ஒரு காலத்திலே தந்தை பெரியார் அவர்களேகூட உறுப்பினராக இருந்து இந்தக் கல்லூரியினுடைய உயர்வுக்கும், வளர்ச்சிக்கும் பாடுபட்டு இருக்கின்றார்.

அப்படிப்பட்ட பெரும் தலைவர்—உண்மையிலேயே புரட்சி செய்த தலைவர்—சமுதாயத்திலே—அரசியலிலே—

—பெரும் புரட்சியை உருவாக்கிய தலைவர்—அந்தத் தலைவருடைய காலடிப்பட்ட மண்; அந்தத் தலைவருடைய குரல் ஒலித்த மண்; அந்தத் தலைவர் பிறந்த மண். அந்த மண்ணிலே நின்று கொண்டு நான் உங்களுக்குச் சொல்லுகின்ற செய்தி, சமுதாயத்திலே நாம் எந்த அளவுக்குத் தாழ்ந்து கிடக்கிறோம் என்பதை எண்ணிப் பாருங்கள்.

இதுதான், இந்த மாணவர் பேரவையினுடைய திறப்பு விழாவில் உங்களுக்கு நான் தருகின்ற மிக முக்கியமான செய்தியாக இருக்க முடியும்.

தாழ்ந்து, தாழ்ந்து, தாழ்ந்து போய்விட்ட ஒரு சமுதாயத்தை தலை நிமிர்த்துகின்ற பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்தான் தந்தை பெரியார் அவர்கள் ஆவார்கள்.

பொருளாதாரம் என்பது பொன்மயமான ஒரு மாளிகையாகக்கூட இருக்கலாம்.

அரசியல் என்பது, அந்தப் பொன் மாளிகையின் மீது அமைக்கப்பட்ட வைரம் பதித்த கலசங்களாகக்கூட இருக்கலாம்.

ஆனால், பொருளாதாரம் என்கின்ற பொன் மாளிகைக்கு —அதன்மீது அழகு ஒளியைச் சிந்திக் கொண்டிருக்கின்ற வைரக்கலசங்களுக்கும் பாதுகாப்பும் வலிவும் அளிக்கவேண்டுமேயானால், சமுதாய சீர்திருத்தம் என்கின்ற அடித்தளம் இருந்தால்தான் பொருளாதாரம் — அரசியல் என்கின்ற இரண்டும் நிலைக்க முடியும். இதைத்தான் பெரியார் அவர்கள் அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொன்னார்கள்.

## நாத்திகர் நேரு

அந்தச் சமுதாயச் சீர்திருத்தத்தை இன்றைக்கு நாட்டில் எல்லா அரசியல் கட்சிகளும் உள்ளத்திலே பதிய வைத்துக் கொண்டு தங்களுடைய அரசியல் இயக்கங்களை நடத்துகிறார்களா என்றால், இல்லை.

எனவே, அங்கொன்றும் இங்கொன்றுமாக சில நேரங்களில், ஜாதி ஒழிப்பைப் பற்றிப் பேசுகிறோம்; மதப் பூசல்களைப் பற்றிப் பேசுகிறோம். அதோடு விட்டுவிடுகிறோம்.

பண்டித ஜவகர்லால் நேரு திட்டவட்டமாக ஒன்றைச் சொன்னார். அவர் தன்னை ஒரு நாத்திகர் என்று சொல்லிக் கொள்ளக்கூட அஞ்சியது இல்லை. அவர் ஆளுகின்ற பொறுப்பில் வீற்றிருந்த காரணத்தினால் இந்தியாவினுடைய தலைமை அமைச்சராக ஏறத்தாக பதினேழு ஆண்டுக்காலம், அவர் கொலு வீற்றிருந்த காரணத்தினால், எல்லா மக்களையும் அரவணைத்துச் செல்ல வேண்டிய பெரும் பொறுப்பும் மற்றவர்களுடைய உரிமை பறிபோய்விடக் கூடாது என்கின்ற சூழ்நிலையும் இருந்த காரணத்தினால் அவர் தாம் நாத்திகர் என்பதை மதங்களிலே தமக்கு நம்பிக்கை இல்லை என்பதை வெளிப்படையாக எடுத்துக் காட்டவில்லையென்றாலும், அவர் மறைந்த நேரத்தில், தான் யார் என்பதை உலகத்திற்கு எடுத்துச் சொல்லிவிட்டுத்தான் மறைந்தார்.

அவர் மறைந்த பிறகு, அவர் எழுதிவைத்துச் சென்ற உயிலை எடுத்துப் படித்தபோது அதிலே காணப்பட்ட வாசகங்கள் எவை?

"நான் மறைந்துவிட்டால் எனக்கு வைதீக முறைப்படி—சனாதன சம்பிரதாயப்படி எந்தச் சடங்குகளும் செய்யக் கூடாது!"

இது நேருவினுடைய உயிலில் காணப்பட்ட வாசகங்கள்.

அது மாத்திரம் அல்ல, தம்முடைய உடல் எரிக்கப்பட்ட சாம்பலை இந்திய நாட்டு மண் முழுவதும் பரப்புகின்ற அளவுக்கு விமானத்தில் எடுத்துச் சென்று ஆங்காங்கு தெளித்து விடுங்கள்; நான் ஓடி ஆடி மகிழ்ந்த கங்கை நதிக் கரையிலும், யமுனை நதிக்கரையிலும் சாம்பலைத் தெளித்து விடுங்கள்—நதியிலே கரைத்து விடுங்கள்— எந்த வைதீகச் சடங்குகளும் நான் மறைந்த பிறகு எனக்காக நடத்தப்படக் கூடாது என்று தெள்ளத் தெளிவாக எழுதி வைத்துவிட்டுத் தான் பண்டித நேரு அவர்கள் மறைந்தார்கள்.

## மூடநம்பிக்கையிலே இருந்து விடுபடுவீர்

அவர் எழுதிய உலக சரித்திரம் என்ற புத்தகத்திலே கூட அழகாகக் குறிப்பிடுகிறார்கள்.

"மதம்" என்பது மனிதனை ஒரு நிலையோடு கட்டுப் படுத்தி வைத்துவிடுகின்றது; விஞ்ஞானம் அப்படி அல்ல; இதோடு எதுவும் முடிந்துவிடவில்லை. தெரிந்து கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது என்று முடிவற்றதாக விளங்குகிறது. விஞ்ஞானம் முடிவுற்றதாக ஆகி, இதற்குள் மேலே அங்கும் போகாதே இங்கும் போகாதே என்று கட்டுப் படுத்தி வைப்பதுதான் மதம். எனவே என்னைப் பொறுத்த வரையில் நான் மதத்தைவிட, விஞ்ஞானத்தைத்தான் அதிகமாக நேசிக்கிறேன் என்று- நான் அல்ல- தந்தை பெரியார் அல்ல — அறிஞர் அண்ணா அல்ல—இந்தியத் தரணியைப் பதினேழு ஆண்டு காலம் ஆண்ட ஆசியாவின் ஜோதி, மனிதர்குல மாணிக்கம் பண்டித நேரு அவர்கள் எழுதி வைத்திருக்கிறார் என்பதை மாணவர்களே உங்களுடைய இதயத்திலே நான் பதிய வைப்பது என்னுடைய கடமை எனக் கருதுகிறேன்.

இதைச் சொல்லுவதால் மதப் பூசல்கள் விளையவேண்டும் என்றோ, அனைவரும் நாத்திகர்களாக மாறிவிட வேண்டும் என்றோ உங்களுக்கு அழைப்பு விடுவதாக அர்த்தம் அல்ல.

குறைந்த பட்சம் மூட நம்பிக்கைகளில் இருந்து விடுபடுகின்ற ஒரு சமுதாயத்தையாவது தோற்றுவிக்க நாமெல்லாம் முனைந்து முயலவேண்டாமா என்றுதான் உங்களையெல்லாம் கேட்க விரும்புகிறேன்.

இந்தச் சமுதாயம் இன்றைக்கு இந்த அளவிற்குக் கெட்டிருப்பதற்கு என்ன காரணம்? நாம் நம்புகின்ற வார்த்தைகள் கொஞ்சமா நஞ்சமா?

நானே மறுநாள் தீபாவளி கொண்டாடப் போகிறோம். போகிறோம் என்று என்னையும் சேர்த்துச் சொல்வதாக யாராவது பத்திரிகையிலே போட்டு விடுவார்களேயானால், அது அவர்களுடைய தவறு.

தீபாவளிக்காக எழுதி வைக்கப்பட்டிருக்கின்ற புராணங்களை—கதைகளை—அவைகளையெல்லாம் நம்பித்தானே தீபாவளி கொண்டாடப்படுகிறது!

தீபாவளி ஒரு உற்சாகமான விழா! அழகான விழா! தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்ற விழா! ஆங்காங்கு மங்கல விளக்குகளை ஏற்றி வைக்கின்ற விழா!

தீபாவளியை முன்னிட்டாவது போனஸ் கிடைக்கிறது —வேட்டி கிடைக்கிறது—நல்ல புடவை கிடைக்கிறது! அதையும் கெடுக்கிறுயே என்று யாராவது கேட்பீர்களேயானால் தீபாவளிப் பண்டிகை என்கிற அந்தச் சொல்லின் மீதல்ல எனக்கு வருத்தம். அதிலே எனக்கு மறுப்பு இல்லை. சுயமரியாதை இயக்கமோ, தன்மான இயக்கமோ அந்தச் சொல்லை மறுத்திடவில்லை. அதற்காகச் சொல்லப்படுகின்ற கதை ஒரு இனத்தையே இழிவுபடுத்துவதாக இருக்கிறதா, இல்லையா?

ஒரு வாரப் பத்திரிகையின் ஆசிரியர், ஒரு நிருபரை நான்கு நாளைக்கு முன்பு என்னிடத்திலே அனுப்பி வைத்திருந்தார்கள். 'என்ன?' என்று கேட்டேன். 'தீபாவளிக்கு செய்தி வேண்டும்' என்று கேட்டார். "என்ன செய்தி வேண்டும்? என்ன தலைப்பிலே வேண்டும்?" என்று கேட்டேன். அந்த நிருபர் சொன்னார்: 'நரகாசூரன் என்ற தீயசக்தி ஒழிக்கப்பட்ட நாள் அந்த நாள். எனவே, அந்த நாளிலே இன்னும் என்னென்ன தீய சக்திகள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதைச் சொல்லுங்கள்" என்று சொன்னார்.

"நான் தீபாவளியும் கொண்டாடுவது இல்லை; நரகாசூரனையும் தீய சக்தி என்று எண்ணுவது இல்லை. எனவே நான் எப்படிச் செய்தி தர முடியும்?" என்று கேட்டேன்.

'சரி, பொதுவாக தீய சக்திகளைப் பற்றி எழுதிக் கொடுங்களேன்' என்று கேட்டார்.

எனவே, பொதுவான தீய சக்திகளைப்பற்றி எழுதி, வன்முறை வெறியாட்டங்களும், சாதிப் பூசல்களும், மதச் சண்டைகளும், அநாகரிக முறைகளும் ஆகிய தீய சக்திகள் ஒழிந்த பாடில்லை என்கிற கருத்தை எழுதி அனுப்பினேன்.

அதை அவர்கள், அவர்களுக்கும் மேலே உள்ள எஜமானர்களிடத்திலே காட்ட, அது அவருக்கு மேலே உள்ள எஜமானர்களிடத்திலே காட்டப்பட, இது வாரப் பத்திரிகையிலே இடம் பெறலாமா என்ற சந்தேகம் அவர்களுக்கு எழ, பிறகு அவர்கள் என்னோடு தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு 'இதிலே சில வரிகளை நீங்கள் நீக்கித்தர முடியுமா?' என்று கேட்க, நான் சொன்னேன்: 'லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழித்து எடுக்கப்படுகின்ற படங்களிலேகூட, நான் தயாரித்த படங்களிலேகூட, நான் எழுதிய கருத்துக்கு விரோதமாக வசனத்தை வெட்ட வேண்டும் என்று யாராவது ஒரு நடிகரோ, நடிகையோ சொன்னால் அவர்கள் வெளியேற்றப்பட்டு இருக்கிறார்களே அல்லாமல் நான் எழுதிய கருத்தை இது வரையில் திரும்பப் பெற்றது கிடையாது. ஆகவே நீங்கள் கட்டுரையைத் திரும்ப அனுப்பி விடுங்கள்' என்று கட்டுரையைத் திரும்பப் பெற்றுக் கொண்டேன்!

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், தீபாவளிக்காகச் சொல்லப்படுகின்ற கதை என்ன?

திடீரென்று ஒரு நாள்—ஒரு அரக்கன், பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு கடலுக்குள்ளேயே போய் ஒளிந்து கொண்டான்.

உடனே விஷ்ணு வராக அவதாரம் எடுத்து, கடலுக்குள்ளே நுழைந்து பூமியைத் திரும்பப் பெற்று, அந்த அரக்கனையும் கொன்றுவிட்டு, வெளியே வந்தார்.

உடனே பூமாதேவிக்கு வராக அவதாரமாக இருந்த விஷ்ணுவின் மீது காதல் பிறந்தது. இருவருக்கும் ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைதான் நரகாசூரன். அவன் பல அக்கிரமங்களைச் செய்தான். எனவே பூமாதேவி அந்த நரகாசூரனைக் கொன்றுவிட்டாள்.

அப்படிக் கொல்லப்பட்டபோது நரகாசூரன், 'நான் இறந்த நாளை எல்லா மக்களும் எண்ணெய் தேய்த்து முழுகி, புத்தாடை உடுத்திக் கொண்டாட வேண்டும்' என்று கேட்டுக் கொண்டான்.

தன்னுடைய மகனின் ஆசையை நிறைவேற்றி வைப்ப தாக பூமாதேவியும் சொன்னாள். அதற்காக தீபாவளி கொண்டாடப்படுகிறது.

இந்தக் கதையிலே வரிக்கு வரி கேள்வி எழுகிறதா, இல்லையா? இந்தக் கேள்விகள் எல்லாம் இடைக்காலத்திலே எழாமல் போன காரணத்தினாலேதான் நம் தமிழகத்தி னுடைய இளைஞர்கள் 'பெரியார் என்றால் யார்? அவர் என்ன கொள்கைகளைச் சொன்னார்? அண்ணா என்றால் யார்? அவர் என்ன கொள்கைகளைச் சொன்னார்? புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் என்றால் யார்? அவர் என்ன கவிதைகளை எந்தக் கருத்தின் அடிப்படையிலே எழுதினார்?' என்பவைகளையெல் லாம் மறந்துவிட்ட ஒரு துயரமான நிலை இன்றைக்கு ஏற்பட் டிருக்கின்றது.

முதலிலேயே கதை அடிபடுகின்றதா? இல்லையா? ஒரு அரக்கன், பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு கடலுக் குள்ளே போய் ஒளிந்துகொண்டான் என்றால் மாணவர் களைக் கேட்கிறேன். பூமி என்ன பாய் போலவா இருக்கிறது, சுருட்ட? பூமி உருண்டையானது அல்லவா? அது உருண்டை என்று கண்டு பிடிப்பதற்கு முன்பு எழுதிய புராணம் அது. பூமி, பாயாகச் சுருட்டப்படுகிறது. பூமியில்தானே அந்தக் கடலும் இருக்கிறது? பிறகு எப்படி கடலுக்குள்ளே பூமியை எடுத்துக்கொண்டு போய் ஒளிந்துகொண்டான்?

கடலுக்குள்ளேபோய் ஒளிந்துகொண்ட அந்த அரக் கனை வெல்ல மகாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்தார். அவதாரத்தைப் பார்த்து பூமாதேவி காதல் கொண்டாள்.

வராக அவதாரம் என்றால், பன்றி முகம் உடைய ஒரு மனிதன். அதைப் பார்த்து பூமாதேவி காதல் கொண்டாள்.

இப்படிப்பட்ட கதைகளின் அடிப்படையில் வருகின்ற பண்டிகைகள் ஒரு சமுதாயத்தினுடைய எதிர்காலத்தை—

ஏற்றத்தை—முன்னேற்றத்தை—முகிழ்க்க விடாமல் பட்டுப் போகச் செய்கின்ற நிலைமையிலே இருக்கின்ற காரணத்தினாலேதான் அவைகள் மீதெல்லாம் நாம் மறுப்புக்கணைகளைத் தொடுக்க வேண்டியவர்களாக ஆனோம்.

எத்தனையோ கதைகள். நான் அவைகளைப் பற்றித்தான் இன்றைக்குப் பேச வேண்டுமென்று விரும்புகிறேன்.

## கழுத்திலே ஒரு முடிச்சு:

## அதற்கும் ஒரு கதை

நீங்கள் எல்லாம் ஒருமுறை உங்கள் கழுத்தைத் தொட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள். இந்தக் கழுத்திலே ஒரு முடிச்சு இருக்கும். ஒரு எலும்பு முடிச்சு, ஏனென்றால், அந்த எலும்பு முடிச்சுக்கு விஞ்ஞான ரீதியாகக் காணப்படுகின்ற ஆராய்ச்சியின் மூலம் நமக்குக் கிடைக்கின்ற தகவல்—உண்மை, கழுத்தை வளைக்க, நிமிர்த்த, இப்பக்கம், அப் பக்கம் ஆட்ட உதவி புரிகின்ற சக்தியைத் தருகின்ற ஒரு எலும்பு முடிச்சு அங்கே இருக்கிறது.

இந்த எலும்பு முடிச்சுக்குக்கூட புராணக் கதை இருக்கிறதே! என்ன கதை அது?

ஒரு காலத்திலே தேவர்களும், அசுரர்களும் திருப்பாற் கடலைக் கடைந்தார்கள். வீரர்களான (!) தேவர்கள் வாசுகி என்கின்ற பாம்பினுடைய வால் பக்கத்தையும் கோழைகளான (!) அசுரர்கள் அந்தப் பாம்பினுடைய தலைப் பக்கத்தையும் பிடித்துக் கொண்டு, மேரு மலையை மத்தாக ஆக்கி, திருப்பாற் கடலைக் கடைந்தார்கள்.

ஒரு பக்கத்திலே அமிர்தம் உருவாயிற்று. இன்னொரு பக்கத்திலே ஆலகால விஷம் உருவாயிற்று.

அமிர்தத்தை தேவர்கள் எடுத்துக்கொண்டார்கள்—தன்னலமற்றவர்கள்!

'அமிர்தம் எங்களுக்கு இல்லையா?' என்று அசுரர்கள் கேட்டார்கள். 'இல்லை' என்றார்கள் தேவர்கள்!

ஆலகாலம் பொங்கிற்று. ஆலகால விஷம் பொங்கினால், அகில உலகத்திற்குமே ஆபத்து என்பதை அறிந்த எல்லா மக்களும், தேவர்கள் உட்பட அத்தனை பேரும், பரமசிவனிடத்திலே ஓடிச் சென்று 'எங்களைப் பாதுகாத்திடுக! பாதுகாத்திடுக! அபயம், அபயம்!' என்று கூறினார்கள்.

உடனே பரமசிவன் மக்களையெல்லாம் காப்பாற்ற பொங்கி வந்த ஆலகால விஷத்தை எடுத்து வாயிலே போட்டுக் கொண்டார்.

பக்கத்திலே இருந்த பார்வதி, விஷம் சிவனுடைய வயிற்றுக்குள்ளே போனால் ஆபத்தாயிற்றே என்று கழுத்தைப் பிடித்துக் கொண்டாள். ஆகவே, வயிற்றுக்குள்ளே விஷம் போகாமல், கழுத்தோடு நின்றுவிட்டது.

சிவனுக்கு கழுத்திலே நின்ற விஷம்தான் சிவனுக்கு ஒரு கட்டியாக ஆயிற்று. அது முதல் உலகத்திலே இருக்கின்ற எல்லா ஆண்களுக்கும் கழுத்திலே ஒரு கட்டி. இது ஒரு கதை; இந்தக் கதை தேவைதானா?

நம்முடைய கழுத்திலே இருக்கின்ற கட்டிக்கே ஒரு கதை; அது மாத்திரம் அல்ல. தாய்மார்கள் மன்னிக்க வேண்டும். இன்னொரு கதையையும் சொல்லுகிறேன்.

## பெண்கள் முகத்தில் மீசை இல்லை அதற்கும் ஒரு கதையா?

பெண்களுடைய முகத்திலே, ஆண்களைப்போல தாடி மீசை ஏன் கிடையாது? அதற்கும்கூட கதை உண்டு.

ஏன் மீசையும் தாடியும் பெண்களுக்கு இல்லை? ஒரு கேள்வியைக் கேட்டால், அதற்கு பதிலையும் விப்பிரபுராணத்திலே எழுதினார்—புராணத்தின் பெயர் விப்பிர புராணம்.

ஒரு ரிஷி இருந்தார், தேவலோகத்திலே. அந்த ரிஷிக்கு, பூலோகத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்கிற ஆசை. தனியாகச் சென்றால் உல்லாசமாக இருக்காது என்று தன்னுடைய துணைவியையும் அழைத்தார்.

துணைவியார், "பருவம் அடைந்த மங்கை நமக்கு இருக்கிறாள்; அவளை தேவலோகத்திலே தனியாக விட்டுவிட்டுப் போனால் என்ன ஆவது! எனவே, நான் வரவில்லை" என்று சொன்னார்.

"இல்லை, இல்லை; நீயும் வரவேண்டும். நாம் பருவம் அடைந்த பெண்ணை பத்திரமான இடத்திலே விட்டு விட்டுப் போகலாம்" என்று சொன்னார்.

யாரிடத்திலே பருவப் பெண்ணை விட்டு விட்டுப் போகலாம் என்று யோசித்தார்கள்.

சிவனிடத்திலே விட்டுச் செல்லலாமா? உடனே அவர்களுக்குரிய ஆராய்ச்சி, அவர் பக்கத்திலே பார்வதியும், தலையிலே கங்கையும் வைத்திருப்பவர் ஆயிற்றே! இந்த இருவரும் போதாமல் தாருகாவனத்து ரிஷி பத்தினிகளையெல்லாம் கற்பழித்ததாகக் கதை இருக்கிறதே! அவரை நம்பி நம்முடைய பருவச் சிட்டை எப்படி விட்டுச் செல்வது?

இந்தக் கேள்வி எழுந்த காரணத்தால் சிவனைக் கை கழுவினார்கள்.

விஷ்ணுவிடம் விட்டுச் செல்லலாமா என்று எண்ணினார்கள்.

அவன் பாமா, ருக்மணி போதாமல் ஆயிரக்கணக்கான கோபிகாஸ்திரிகளோடும் விளையாடி, அடுத்த வீட்டுக்காரன் மனைவியான ராதையிடமும் விளையாடியவன் ஆயிற்றே, எனவே, அவனிடத்திலே எப்படி விட்டுச் செல்வது? என்ற ஐயப்பாடு ஏற்பட்டது. அவரையும் கைகழுவினார்கள்.

சரி, இந்திரனிடம் விட்டுச் செல்லலாமா என்றவுடன் "சரிதான் போங்கள்; அவரிடத்திலா? அவர் ரிஷிபத்தினி

அகலிகையையே கற்பழித்து அவருடைய உடலெல்லாம் ஆயிரம் கண்கள்—புண்கள் என்கின்ற அளவுக்கு கடும் கோபத்திற்கு ஆளானவர் ஆயிற்றே, அவரிடமா?' என்று பத்தினி கேட்டாள்.

கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார்கள். எமனிடத்திலே விட்டுச் செல்லலாம் என்று. அவன்தான் தர்மராஜன் — நல்லவன்; அவனிடத்திலே விட்டுச் செல்லலாம் என்று முடிவுக்கு வந்து, எமனிடத்திலே அந்தப் பெண்ணை ஒப்படைத்து விட்டு, ரிஷியும் ரிஷிபத்தினியும் பூலோகத்திற்குப் புறப்பட்டார்கள்.

எமன் ஒரு தரம் தன்னுடைய அரண்மனையிலிருக்கும் அந்தப் பெண்ணைப் பார்த்தான். தர்மராஜன் அல்லவா? அவனுக்கே சபலம் தட்டியது.

எனவே, அந்தப் பெண்ணிடத்தில் தன்னுடைய ஆசையை வெளியிட்டான் எமன். அவளும், ஆசையை வெளியிடுபவன் எமன் ஆயிற்றே என்ற காரணத்தால் சம்மதித்தாள்!

இருவருக்குமிடையே நட்பு உதயமாயிற்று. இந்த நட்புக்கிடையே எமனுக்கு ஒரு சந்தேகம். நாம் செய்கிற காரியம் யாருக்காவது தெரிந்துவிட்டால் என்ன ஆவது என்பதற்காக எமன், பகல் நேரத்திலே எல்லாம் அந்தப் பெண்ணை தன்னுடைய வயிற்றிலே போட்டு விழுங்கிவிடுவது. இரவு நேரத்திலே மாத்திரம் தன்னுடைய பள்ளியறைக்குச் சென்று வெளியே துப்புவது. பிறகு இருவரும் பள்ளியறையிலே இன்பமாக இருப்பது. இது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நடைபெற்று வருகின்ற எமலோகத்துக் காதல் காட்சி.

ஒரு நாள் குளிப்பதற்காக நீரோடைக்குச் செல்லுகிறான் எமன். குளிக்கின்ற நேரத்திலே வயிற்றுக்குள்ளே மப்பு மந்தாரம் இருக்கக் கூடாதல்லவா? எனவே, பக்கத்திலே இருந்த பளிங்கு மண்டபத்திலே அந்தப் பெண்ணைத் துப்பி உட்கார வைத்துவிட்டு, 'இங்கேயே இரு குளித்து விட்டு வருகிறேன்' என்று சொல்லிவிட்டுப் போய் குளிக்கிறான்.

அந்த நேரத்திலே அந்தப் பக்கமாக அக்கினி பகவான் வருகிறான். வந்தவன் பளிங்கு மண்டபத்திலே இருக்கிற பாவையைப் பார்த்துவிடுகிறான். உடனடியாக அவனுக்குக் காதல் ஏற்படுகிறது. அவளும் சம்மதித்து விடுகிறாள்.

இருவரும் அந்தப் பளிங்கு மண்டபத்திலே இன்பமாக இருக்கிற நேரத்தில் எமன் குளித்துவிட்டு அந்த வழியாக வருகிறான். அவன் பார்த்துவிட்டால் ஆபத்து ஆயிற்றே என்று பயந்த அந்தப் பருவ மங்கை, எமனை ஏமாற்றுவதற்காக அக்கினி பகவானைத் தூக்கி தன்னுடைய வயிற்றிலே போட்டு விழுங்கிவிடுகிறாள்.

எமன், இவைகள் எதுவும் தெரியாதவன்—பாவம். அவளை வழக்கம் போல் தன்னுடைய வயிற்றிலே தூக்கிப் போட்டு விழுங்கி விடுகிறான்.

அக்கினி பகவானைத் தேடிக்கொண்டு வந்த வாயு பகவான், எங்கே நண்பனைக் காணவில்லையென்று உலகமெல்லாம் தேடத் தொடங்கிவிட்டான்.

இப்போது ஞாபகத்திலே வைத்துக் கொள்ளுங்கள்.

எமன் வயிற்றிலே அந்தப் பருவப் பெண்! பருவப் பெண்ணின் வயிற்றிலே அக்கினி பகவான்!

பகல்நேரம் வந்தால் சும்மா இருக்கக் கூடாதே என்று, அந்தப் பருவப் பெண், எமன் வயிற்றுக்குள்ளேயே தன் வயிற்றிலிருக்கிற அக்கினி பகவானை உமிழ்ந்து, எமனுடைய வயிற்றையே பள்ளியறையாக பகல் நேரமெல்லாம் ஆக்கிக் கொண்டாள்.

பிறகு இரவு நேரத்தில் வழக்கம்போல் எமன் அவளை உமிழ்வதும், அவளோடு இன்பமாக இருப்பதும் வாடிக்கையாக இருந்தது.

இதற்கிடையே வாயு பகவான், உலகமெல்லாம் தேடுகிறான்; அக்கினியைக் காணவில்லை. அக்கினி இல்லா-

விட்டால் உலகம் இயங்குமா? சிகரெட் பிடிக்க நெருப்பு எழுமா? அடுப்பெரிக்க விறகுக் கட்டையில் தீ வருமா?

எனவே, அக்கினியைக் காணமல் உலகமெல்லாம் அலறுகிறது.

அந்த நேரத்திலே உலகைச் சுற்றிப் பார்க்கச் சென்ற ரிஷியும், ரிஷிபத்தினியும் தேவலோகம் திரும்புகிருர்கள். பெண்ணைக் காணவில்லை; ஒன்றும் புரியவில்லை. முறையிடு கிருர்கள்.

அந்த நேரத்திலே வாயு பகவான், இந்த விஷயங்களை யெல்லாம் இரகசியமாகத் தெரிந்து வைத்துக் கொண்டு ஒற்றனக இருக்கிற வாயு பகவான், இதை வெளிப்படுத்த வேண்டும் என்று தேவர்களுக்கு விருந்து வைத்து, சிறப்பு விருந்தினர்களாக சிவன், விஷ்ணு, பிரம்மா, எமன் அனை வரையும் அழைக்கிருன், தேவர்கள் உட்பட.

அனைவரும் வருகிருர்கள். பெற்றேர்களும் வந்திருக் கிருர்கள்.

எமனிடத்திலே மாத்திரம் மூன்று இலைகள் போடச் சொல்கிருன் வாயு பகவான்.

சிவன், 'என்ன அவனுக்கு மாத்திரம் மூன்று இலைகள்? எங்களையெல்லாம் அவமதிக்கிருயா?' என்று கேட்கிருர்.

'இல்லை, இல்லை; கொஞ்சம் பொறுங்கள்' என்று சொல்லி விட்டு, எமனைப் பார்த்து, 'எமனே, உன்னுடைய வயிற் றிலே இருக்கின்ற அந்தப் பெண்ணை வெளியே உமிழ் வாயாக!' என்றதும் எமன் எதுவும் சொல்ல முடியாமல் அந்தப் பெண்ணை வெளியே உமிழ்கிருன்.

அந்தப் பெண் வெளியே வந்து இன்னொரு இலையிலே உட்காருகிருள்.

இரண்டு இலை—இரட்டை இலை—ஆயிற்று!

ஆனவுடன், அவர் கேட்கிறார்: 'சரி மூன்றாவது இலை எதற்காக?' என்று, எமன் ஆத்திரத்தோடு கேட்கும்பொழுது வாயுபகவான் அந்தப் பெண்ணைப் பார்த்து, 'பத்தினித் தங்கமே! உன் வயிற்றுக்குள் இருக்கின்ற என் ஆருயிர் நண்பன் அக்கினி பகவானை தயவு செய்து வெளியே அனுப்பு' என்று சொல்லுகிறான்.

உடனே அவள் நடுங்கி வயிற்றுக்குள் இருந்த அக்கினி பகவானை வெளியே உமிழ, அக்கினி பகவான் வெளியே வருகிறான். அவன் வெளியே வருகின்ற பொழுது அந்த நடுக்கத்தில் அந்தப் பெண்ணுடைய முகத்திலே இருக்கின்ற தாடி, மீசையெல்லாம் பொசுங்கி விடுகிறது.

அதுவரையில் உலகத்திலே இருந்த பெண்களுக்கு ஆண்களைப் போல முகத்திலே தாடி, மீசை இருந்தது! கதைப்படி!

அக்கினி வெளியே வந்த நடுக்கத்திலே தாடி, மீசையெல்லாம் பொசுங்குகிறதல்லவா? அது முதல் உலகத்திலே பிறந்த எல்லாப் பெண்களும், தாடி, மீசை இல்லாமலே பிறக்கிறார்கள். இது ஒரு கதை!

இப்படிப்பட்ட கதைகளையெல்லாம் இன்னமும் நம்பிக் கொண்டு உலகத்திலே நடைபெறுகின்ற எல்லாவிதமான நடவடிக்கைகளுக்கும் புராணப்படி—வைதீகப்படி, சனாதன கருத்துப்படி கதைகளைக் கட்டி வைத்துக்கொண்டுஎவ்வளவு நாளைக்கு இந்தச் சமுதாயதம் ஏமாறுவது? என்ற கேள்வியின் அடிப்படையில் எழுந்த பதில்தான் தன்மான உணர்வு! பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுடைய பிரச்சாரம்! பேரறிஞர் அண்ணா அவர்களுடைய இயக்கம். இவைகள் எல்லாம் இந்த நாட்டில் தோன்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது!

இங்கே இருப்பதைப் போல மேல் நாடுகளிலும் கடவுள்கள் இல்லாமல் இல்லை. அந்தக் கடவுள்கள் எல்லாம் இன்றைய தினம் மாஜி கடவுள்களாக ஆகிவிட்டார்கள்.

அந்தக் கடவுள் சிலைகள் எல்லாம் அங்குள்ள பொருட் காட்சிகளில் கண்காட்சிகளாக வைக்கப்பட்டு உலகத்திலே

இருக்கின்ற சுற்றுப்பயணிகள்பார்த்துக் களிக்கக் கூடிய நிலைமையில் அந்தக் கடவுள்கள் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஆனால், இங்கே நாம் ஆயிரக்கணக்கான கடவுள்களை வணங்கிக் கொண்டிருக்கிறோம்.

ஐயா சொன்னால் கோபம் வரலாம், அண்ணா சொன்னாரே என்று ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். கருணாநிதி சொல்வதற்குக் கடும் ஆத்திரம் கிளம்பலாம். வீரமணி சொல்கிறாரே என்பதற்காக வெறுக்கலாம்.

தேசியக்கவி சுப்பிரமணிய பாரதி என்ன சொன்னார்?

'ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி

அலையும் அறிவிலிகாள்'

இந்த வார்த்தையைப் பெரியார்கூட இவ்வளவு தாராளமாகப் பயன்படுத்தவில்லை. அண்ணாகூட பயன்படுத்தவில்லை —இவ்வளவு தாராளமாக!

'ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி

அலையும் அறிவிலிகாள்!'

என்று தேசிய கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் பாடவில்லையா!

எனவேதான் நாம் ஆயிரக்கணக்கான தெய்வங்களுக்கு—நூற்றுக்கணக்கான ஜாதிகளுக்கு-மத வேறுபாடுகளுக்கு-நம்மையும் பலி கொடுத்துவிட்ட காரணத்தால்— நம்மை உட்படுத்திக் கொண்டு, ஆட்படுத்திக் கொண்டு விட்ட காரணத்தால் இந்தச் சமுதாயத்தினுடைய முன்னேற்றமே ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்காலம் பின்னோக்கிக் கிடக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

உலகத்திலே வளர்ந்து வரும் நாடுகளையெல்லாம் பார்க்கிறோம். சீரிழந்த ஜப்பான் இன்றைக்கு சிங்கார புரியாக வளர்கிறது.

உடைந்து நொறுங்கிப் போய்விட்ட ஜெர்மானிய நாடு இன்றைக்கு உல்லாசப் பயணிகளையெல்லாம் வரவேற்கின்ற உற்சாக பூமியாக விளங்குகின்ற காட்சியைக் காண்கிறோம்.

லண்டன் மாநகரம் குண்டுகளால் பாழடிக்கப்பட்டதுண்டு. ஆனால் இன்றைக்கு லண்டன் மாநகரமானாலும், இங்கிலாந்து தேசமானாலும், அங்கே வளமான வாழ்வு, விஞ்ஞான யுகத்தை நோக்கி செல்லுகிற வாழ்வு இருப்பதைப் பார்க்கிறோம்.

காணப்படாத கண்டமாக இருந்து, ஆங்கிலேயர்கள் முதலிலே குடியேறி, பிறகு அவர்களே தங்களுடைய நாடு என்று உரிமையாக்கிக் கொண்டு வளர்ந்து வந்திருக்கின்ற அமெரிக்கத் திருநாடு-நாம் இங்கே நின்று குழந்தைகளுக்குக் கண்ணாடியிலே காட்டிக் கொண்டிருக்கின்றோமே, 'அம்புலி பார்! அம்புலி பார்!' என்று, அந்த அம்புலியினுடைய உலகத்திலேயே தன்னுடைய காலடியை எடுத்து வைத்துவிட்டுத் திரும்பி இருக்கிறது என்றால், இவைகள் எல்லாம் விஞ்ஞானத்தினுடைய வளர்ச்சி இல்லையா?

அந்த விஞ்ஞானத்தைப் போற்றி வளர்க்க—அதிலே நாம் வலிவு பெற்ற நிலையை உண்டாக்க—விஞ்ஞான ரீதியாக ஒரு சமுதாயத்தை ஏற்படுத்த—சமுதாயத்திலே ஏற்பட்டிருக்கின்ற மூட நம்பிக்கைகளையெல்லாம் தகர்த்தெறிய—இளைஞர்களால்தான் முடியும்.

எனவே, அந்த இளைஞர்களை நம்பித்தான் எதிர்காலம் இருக்கிறது; தமிழகம் இருக்கிறது; இந்தியா இருக்கிறது; இந்த உலகம் இருக்கிறது; எனவே, அந்தத் தமிழ் இளைஞர்களையெல்லாம் நான் அழைக்கிறேன். அத்தகைய முன்னேற்றம் காணவாருங்கள்; வாருங்கள் என்று அழைக்கிறேன்.

மாணவர் தலைவர் இங்கே பேசும்போது—கருணாநிதி வாலிபனாக இருந்தபோது பாடிய பாட்டு என்று சொன்னபோது— எனக்கேகூட சங்கடமாகத்தான் இருந்தது.

வாலிபனாக இருந்தபோது இப்படி வழுக்கைத் தலையோடாஇருந்தேன்? இல்லை. இதே ஈரோட்டில் நான் காளை

போல் நடமாடிய காலம் உண்டு. என்னுடைய இளவல் கே. வீரமணி அவர்கள் சின்னஞ் சிறுவனாக மேடையில் ஏறிப் பேசிய அந்தக் காலத்தில் நான் இளைஞனாக இருந்து எழுதிய பாடல்களில் சிலவரிகளை இங்கே மாணவர் தலைவர் முகமது அலி பாடிக் காட்டினார்கள்.

"பாராட்டிப் போற்றி வந்த பழமை லோகம் ஈரோட்டு பூகம்பந்தால் இடியுது பார்" என்று எழுதியதைப் பாடிக் காட்டினார்கள். எனக்கு எத்தனையோ பசுமையான நினைவுகள்!

1944—45-ம் ஆண்டுகளில் பெரியாரோடு இந்த நகரில் வாழ்ந்த அந்தக் காலத்தை எல்லாம் எண்ணிப் பார்க்கிறேன்.

புதுவை மாநிலத்தில் கயவர்களால் தாக்கப் பட்டு செத்துவிட்டான் என்று சாக்கடையில் வீசி எறியப்பட்ட என்னைத் தூக்கியெடுத்து எந்தக் கரம் என்னுடைய நெற்றியில் காயங்களுக்கு மருந்திட்டதோ அந்தக் கரம் இன்றைக்கு இல்லையே என்கிற கவலையோடுதான் ஈரோட்டு நகரில் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

ஈரோட்டுப் பாசறையில் இருந்து நான் பல கவிதைகளை எழுதியிருக்கிறேன். தமிழர்களுடைய புறநானூற்றுப் பெருமைகளை விளக்குகின்ற கவிதைகளும் எழுதியிருக்கிறேன். அதிலே ஒரு கவிதையைச் சொல்ல விரும்புகிறேன். (கலைஞர் கவிதையை உணர்ச்சியுடன் கூறி முடிக்கிறார். பலத்த கைதட்டல்)

இந்தப் புறநானூற்றுப் பற்றிய விளக்கக் கவிதையை எழுதிய கரம்தான் இந்தக் கரம்! இந்தக் கரத்திற்கு எழுச்சியை ஊட்டியது தந்தை பெரியாரின் கரம்! இதற்கு எழில் சேர்த்தது அண்ணாவின் கரம். எழுதுவதுதான் என் கரம் என்று கூறி இத்தகைய கரங்களை வலுப்படுத்த வாரீர்! வரரீர்! என்று அழைத்து விடை பெறுகிறேன்.

NATHAIYER LIBRARY

(நவம்பர் 3ம் தேதி யன்று கலைஞர் ஆற்றிய உரை)

# கலைஞர் தீட்டிய
## பாரதி பதிப்பகத்தின் வெளியீடுகள்



| | ரூ. பை |
|---|---|
| **நெஞ்சுக்கு நீதி** | **60-00** |
| மணிமகுடம் | 8-00 |
| வெள்ளிக்கிழமை | 10-00 |
| ரோமாபுரிப் பாண்டியன் (சரித்திர நாவல்) | 40-00 |
| கலைஞரின் கவிதைகள் (மலிவுப் பதிப்பு) | 16-00 |
| புதையல் | 15-00 |
| சிலப்பதிகாரம் - நாடகக் காப்பியம் | 15-00 |
| கலைஞர் கருணாநிதியின் சிறுகதைகள் | 13-50 |
| இனியவை இருபது | 9-50 |
| ஒளி படைத்த கண்ணினாய் வா! வா! வா! | 8-25 |
| ஒரே ரத்தம் | 7-00 |
| அரும்பு | 6-00 |
| மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்று | 8-00 |
| தேனலைகள் | 5-50 |
| கலைஞர் தொடுத்த கணைகள் | 5-00 |
| இலங்கைத் தமிழா! இது கேளாய்! | 3-90 |
| பேசும் கலை வளர்ப்போம் | 3-75 |
| வைரமணிகள் | 2-50 |
| வண்டிக்காரன் மகன் | 1-50 |
| புனித ராஜ்யம் | 1-50 |
| சிறையில் பூத்த சின்னச் சின்ன மலர்கள் | 1-50 |
| யாரால்? யாரால்? யாரால்? | 1-00 |
| பூந்தோட்டமும் இன முழக்கமும் | 1-00 |

★ புத்தக விலையுடன் ரூ. 3-50 பதிவுத் தபால் செலவு சேர்த்து M.O. செய்யுங்கள். அல்லது வி. பி. பி.யில் பெற எழுதுங்கள். வி. பி. பி. தபால் செலவு தனி.

★ பாரதி பதிப்பக புதிய விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்

விபரங்களுக்கு:

**பாரதி பதிப்பகம்**

108, உஸ்மான் ரோடு,
தியாகராய நகர், சென்னை-17.

Phone 440205

பாரதி பதிப்பகம்